காவலன் வருடசந்தா
இலங்கை, வெளிநாடுகள்
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

"ஒருவர் ஒருவரைப் பார்ப்பதில் அன்பு நிலவுகின்றதில்லை; ஆயின், ஒரேதிசையை இருவருமாகப் பார்ப்பதிலேயே அன்பு பரிணமிக்கிறது."
— கிறிஸ்தவப் பெரியார்

94-ம் புத். | 1969-ம் ஆண்டு வைகாசி மாதம் 17-ந் திகதி சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 18-ம் இல.

# திருவழிபாட்டின் புதிய அட்டவணை

## பல புனிதர்கள் சில நாடுகளில் மாத்திரம் கொண்டாடப்படுவர்

திருச்சபையின் வழிபாட்டுக்கென திரு வருகைக்காலத்திலிருந்து அமுல் செய்யப்படும் புதிய வழிபாட்டு அட்டவணையில் புனிதர்களின் திருநாளைக் கொண்டாடுவதில் பல மாற்றங்கள் வருகின்றன இற்றைவரைக்கும் முழுத் திருச்சபையினுலும் கொண்டாடப்பட்ட சில புனிதர்களின் திருநாள் இனிமேல் அவர்கள் நன்கு அறியப்பட்ட இடங்களில் மாத்திரம் கொண்டாடப்படும்.

**153 புனிதர்**

புதிய திருவழிபாட்டின் அட்டவணையில் அப்போஸ்தலர்களைத் தவிர 153 புனிதர்கள் மாத்திரம் முழுத் திருச்சபையினுலும் கொண்டாடப்படுவர். இவர்கள் எல்லாக் காலத்திலுமிருந்தும் தேசங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இத் தேர்தல் திருச்சபையில் கத்தோலிக்க (அகில) தன்மையைப் பிரதிபலிக்கின்றது.

**தை 1-ம் திகதி மாதாவின் நாள்**

அட்டவணையில் காலங்களின் அமைப்பைப் பொறுத்தமட்டில் ஆழமான மாற்றங்கள் இல்லை. கர்த்தரின் திருநாட்கள் முன்போல அனுசரிக்கப்படும். ஆனல் திருநாமத்தினதும், திரு இரத்தத்தினதும் திருநாட்கள் கொண்டாடப்பட மாட்டா. தை 1ஆம் திகதி கர்த்தரின் பரிசுத்த தாயின் தினமாகக் கொண்டாடப்படும்.

மாதாவின் பெரிய திருநாட்கள் முன்போலவே இருக்கும். ஆனல் லூர்து மாதா (மாசி 11-ம் திகதி), கார்மேல்மாதா (ஆடி 16ஆம் திகதி), பனிமயமாதா (ஆவணி 5ஆம் திகதி), மாதாவின் மாசற்ற இருதயம் (ஆவணி 22ஆம் திகதி) இத்திருநாள் உலகம் முழுவதிலும் எல்லா இடத்திலும் அனுசரிக்கப்பட வேண்டுமென்ற கட்டாயமில்லை.

புனிதவளனரின் திருநாள் (பங்குனி 19ஆம் திகதி) கொண்டாடப்படும். வேலையாட்களின் பாதுகாவலர் என்ற பெயரின்கீழ் கொண்டாடப்படும், அவருடைய திருநாள் கட்டாயம் கொண்டாடப்பட வேண்டியதொன்றல்ல.

**நாட்களிலும் மாற்றம்**

வானதூதர்கள் மிக்கேல், கபிரியேல், இரபாயேல் இவர்களின் திருநாட்கள் புரட்டாசி 29ஆம் திகதி ஒன்றுகக் கொண்டாடப்படும்.

திருக்குடும்பத்தின் திருநாள், வெளிப்படுத்துதல் திருநாளை அடுத்துவரும் ஞாயிறு தினம் அல்ல, ஆனல் கிறிஸ்துவின் பிறப்பை அடுத்து வரும் ஞாயிறு தினத்தில் கொண்டாடப்படும்.

## மேற்றிராணித்துவ அபிஷேக 20ஆம் ஆண்டு நிறைவு

இம்மாதம் 22-ம் திகதி நமது ஆயர் மிக வந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை அடிகள் ஆயர் பட்டம் பெற்ற 20-வது ஆண்டுநிறைவு விழாவாகும். கடந்த 20 ஆண்டுகளிலும் கடவுள் அவர் வழியாக யாழ் - மேற்றிராசன இறை மக்களுக்கு அரும்பெரும் அருளை அள்ளி அளித்திருக்கிறர். இதற்காக ஆயருடன்சேர்ந்து கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

இன்னும் பல ஆண்டுகட்கு ஆயர் நற்சுகத்துடன் வாழ்ந்து மறைப்பணியிலும், மக்கள் பணியிலும் கடவுளின் கருவியாகக் கண்ணியத்துடன் கடமைசெய்ய வேண்டுவோமாக.

'காவலன்' ஸ்தாபனத்தின் பெயராலும் வாசகரின் பெயராலும் ஆண்டகைக்குச் சோபன வாழ்த்துக்களை வழங்குகின்றேம்.

### தொழிலாளிகளின் உரிமைக்காகக் குரலெழுப்புங்கள்

"மனிதன் இன்றைக்கும் பொருளாதார விதிகளுக்குப் பணியும் கருவியாக மாத்திரம் கருதப்படுகின்றன். இதை எதிர்த்துத் திருச்சபை போராடியிருக்கின்றது. ஆனல் இன்று கூடுதலாக இப்போராட்டத்தை நடாத்தத்திருச்சபை அழைக்கப்படுகின்றது." இவ்வாறு சென்றவருடம் 33கருதினல்களுடன் கூட்டுப்பலியை ஒப்புக்கொடுக்குப் பொழுது பரி. தந்தை கூறினர்.

### எதிர்ப்பை ஆதரியுங்கள்

"கூடுதலாகப் பங்குபற்றவும், கூடியபொறுப்பைக் கையேற்கவும் விரும்பிநடத்தப்படும் எதிர்ப்புகள் எல்லாவற்றையும் நாம் ஊக்குவிக்க வேண்டும்" என்று பரீஸ் அதிமேற்றிராணியார் கருதினல் மாட்டின் சென்ற ஞாயிற்றுக்கிழமை கூறினர். திருச்சபைக்குள்ளும் நற்செய்தியை அறிவிப்பதற்குப் புதிய அமைப்பையும் வழிகளையும் தேடுவதிலே இவ்விதி பின்பற்றப்படவேண்டியதாகும்.

## ஐ. நா. அதிகாரிகளைப் பரிசுத்த தந்தை சந்திக்கிறர்

ஐ. ந. பொதுக் காரியதரிசி யூதாண்ட் உட்பட பல ஸ்தாபன அதிகாரிகளை பரி. தந்தை ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி சந்தித்தார். ஸ்தாபனத்தின் முன்னேற்ற வேலைகளை மெச்சிப் பேசுகையில், தாம் "மக்களின் முன்னேற்றம்" என்ற நிருபத்தில் வற்புறுத்தியவற்றை மீளவும் நினைவூட்டினர். "முன்னேற்றம் பொருளாதாரத்தில் மாத்திரம் நின்றுவிடாது, மனிதனை முழுமையாகக் கணித்து அவனை முன்னேற்றவேண்டும். மனிதன் இந்த உலகத்திலே நிறைவாகச் சீவிக்கவும் இந்த உலகத்தை ஒழுங்குபடுத்தி முன்னேற்றவும் திருச்சபை உழைத்து வருகின்றது. இதைச்செய்வதில் திருச்சபை அதிகாரத்தின் ஆசையினலோ நாடுகளைக் கைப்பற்றும் ஆசையினலோ தூண்டப்பட்டதல்ல. ஆனல்சேவையெனும் கடமையினலே தூண்டப்பட்டே செயல்வதாகும். ஆகையினல் மனிதனுடைய தனிப்பட்ட அல்லது சமுதாய முன்னேற்றத்திற்காக உங்கள் ஸ்தாபனம் எடுக்கும் முயற்சிகளிலே திருச்சபை ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கின்றது" என்றர்

### "ஒற்றுமைக்கு வசதிகள் இன்றுபோல் என்றுமில்லை"

இலங்கை மெதடிஸ்ற் கிறிஸ்தவ சபையின் முன்னள் சபாநாயகர் மேதர் அடிகளார் இன்று இலங்கையிலும் உலகிலும் கிறிஸ்தவ சபைகளுக்குள் ஒற்றுமை ஏற்படுவதற்கு உள்ள நல்ல நிலைமைபோல் தனது சீவிய காலத்தில் ஒருபோதுமே இருக்கவில்லை என அண்மையில் அவர் பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருக்கிறர். "சகலகிறிஸ்தவ சபைகளும் உண்மையான மனதோடு ஒற்றுமையை விரும்புகின்றன. அவை யாவும் ஒற்றுமையை நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டிருக்கின்றன. அப்போஸ்தலர் காலத்திலே கிறிஸ்தவர்கள் இருந்த ஆன்மநிலைமைக்கும் இன்றுள்ள நிலைமைக்கும் உள்ள வித்தியாசங்கள் பல சபைகளிலுமிருந்து நீக்கப்படும்போது அந்த ஒற்றுமை ஏற்படுவது திண்ணம்" எனக் கூறியிருக்கிறர்.

## பழைய சில அர்ச்சியசிஷ்டர்கள் நீக்கப்படவில்லை

சில தினங்களுக்குமுன் சில தினசரிப்பத்திரிகைகளில் பாப்பரசர் செய்த புதியமாற்றங்களுள் முப்பதிற்குமேலான புனிதர்களை அர்ச்சியசிஷ்டர் வரிசையிலிருந்து அகற்றிவிட்டதும் ஒன்றுஎன்ற கருத்துப்படச் செய்திகள் வெளிவந்துள்ளன. தயாரிக்கப்படும் புதியவருட சுழல் அட்டவணையில் சில புனிதர்களின் பெயர்கள் அகற்றப்படுவதனல் இப்புனிதர்களைப் பாப்பரசர் அர்ச்சியசிட்டர் வரிசையிலிருந்து நீக்கிவிட்டாரென்பது பேதமையான பேச்சு. மக்களுடைய விசேஷ பக்தியைத் தூண்டுவதற்காகப் பழைய சில புனிதர்களின் இடத்தில் வேறுபெயர்கள் இடப்பட்டிருப்பதன் நோக்கத்தையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். அச்சில் காண்பது எல்லாவற்றையும் உண்மையெனக் கொள்வதற்குமுன் தேறவிசாரிப்பது நற்பயனை அளிக்கும்.

## இங்கிலாந்துக்குப் பாப்பரசரின் புதிய தூதுவர்

சென்ற 5 வருட காலமாக இங்கிலாந்து பிரதேசத்தில் பரிசுத்த தந்தையின் தூதுவராகக் கடமையாற்றி வந்த கார்டினல் அடிகளார் பெல்ஜியம லக்சம்பேர்க் பிரிவுக்கு மாறிச் செல்கிறர் என்பதை நேயர் அறிவர். அவருடைய இடத்துக்குப் பரிசுத்த தந்தை மகாவந்தனைக்குரிய டொமினிக்கோ என்றிச்சி அடிகளாரை நியமித்திருக்கின்றர். இவருக்கு இப்போது வயது அறுபது. 1962ஆம் ஆண்டு தொடக்கமாக, இவர் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து பிரதேசத்தில் பாப்பரசரின் தூதுவராக கடமையாற்றி வந்திருக்கின்றர்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. C. E. (Ordinary Level)

# கிறிஸ்தவம்

க. பொ. த. பத்திரப் பரீட்சைக்குரியது (மார்கழி 1969)

(தமிழாக்கம்: சிஸ். அன்ரனி யோசவ்)

## புனித லூக்காஸ் சுவிசேஷம்

### வினா: புனித லூக்காஸ் சுவிசேஷத்தின் இலக்கும், நோக்கமும் என்ன?

முகவுரையில் (1 : 1 - 3) லூக்காஸ் தன புத்தகத்தைத் "தியோபிலஸ்" என்பவருக்கு அர்ப்பணம் செய்கிறார். இவர் மதிப்புக்குரிய பதவி வகித்த ஓர் அதிகாரி. 'Theophilus' என்பது 'தேவனை நேசிக்கும கிறீஸ்தவர்களையும்' குறிக்கும ஒரு சொல். இக்கூற்றை எபிப்பானியுஸ், ஓரிஜின் என்போரும் ஆதரிக்கிறார்கள். ஒரு வேளை தியோபிலஸ் என்பவருடைய ஆதரவில் இப்புத்தகம எழுதப்பட்டிருக்கலாம். இவ்விதமாய் ஆதரிக்கும் பெரியார்கள் அப்புத்தகத்தைத் தங்கள் செலவில் பிரசுரிப்பது வழக்கம். ஆயினும், இப்புத்தகம் தியோபிலசுக்கு மாத்திரமல்ல, புனித பவுல் அப்போஸ்தலரினால் ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபையின் அங்கத்தவர்களுக்கும உரியதென்று பின்வரும் ஆதாரங்களிலிருந்து நிரூபிக்கலாம். புனித சின்னப்பர் யூதர்களில் சிலரையும், பிற சாதியாருட சிலரையும் மனந்திருப்பினார். இவர்களுள் பிற சாதியாரே பெரும்பாலானோர். லூக்காஸ் சுவிசேஷம் பெரும்பாலும் புறசாதியாருக்கே எழுதப்பட்டது என்பது தெளிவு. ஏனெனில், பலஸ்தீனாவின் பழக்கவழக்கங்கள், பாஷை, புவியியல் முதலியவற்றை விபரமாகக் கூறுகின்றார். உ-ம்:- நசரேத்தும் கப்பர்னாவூரும் கலிலேயாவில் உண்டு என்கிறார் (1:26, 4.31). மேலும், ஜொரசேனிய நாடு கலிலேயாவில் உள்ளதென்றும் (8 : 26), அரிமத்தியா யூதேயாவில் உள்ளதென்றும (23 : 51), எமாவுஸ் ஜெருசலேமிலிருந்து 60 மைலுக்கு அப்பாலுள்ளதென்றும் (24 : 13) குறிப்பிடுகின்றார்.

இன்னும் இடப்பெயர்களைக்குறிக்குமிடங்களைத் தவிர, அரமிக் அன்றேல எபிரேய சொற்களை உபயோகிக்கவில்லை. "ரபி" என்ற சொல்லுக்குப் பதிலாகப் "போதகரே" என்ற சொல்லை உபயோகித்திருக்கின்றார் (5 : 5, 8 : 24). இதுவுமல்லாமல் யூதர்களுடைய பண்பாடுகளை விரிவாகக் கூறுகின்றார். உ-ம்:- பாஸ்கா புளியாத அப்பப்பண்டிகையென்று (22 : 1-7) விரிவாகக் காட்டுகின்றார்.

மக்கள் எதிர்பார்த்த மெசியாவாக அல்ல, உலக இரட்சகராகவே கிறீஸ்துவைச் சித்திரிக்கின்றார். அத்தோடு யேசுவின் பரம்பரையைப் புனித மத்தேயு செய்வதுபோல ஆபிரகாம்வரையுமல்ல, ஆதாம் வரையும குறிப்பிட்டுக் காட்டுகின்றார். அதே நோக்கைக் கொண்டே புறசாதி வாசகர்களுக்கு மனத்தாக்கல் வருவிக்கும் எந்தவித வசனத்தையும் தன் சுவிசேஷத்திலிருந்து அகற்றுகின்றார். உ-ம்:- மத்தேயு சுவிசேஷத்தில் (10 : 5) கிறீஸ்துநாதர் பன்னிரண்டு அப்போஸ்தலரைச் சுவிசேஷம் பிரசங்கிக்க அனுப்பியபோது, "நீங்கள் பிறசாதியாருடைய நாடுகளுக்குப் போகாமலும், சமாரியருடைய பட்டணங்களிலே பிரவேசியாமலும்" (10 : 5) என்ற பகுதியை லூக்காஸ் தவிர்த்துவிடுகின்றார். இன்னும் "இஸ்ராயேல் கோத்திரத்திலிருந்து சிதறிப்போன ஆடுகளிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயொழிய (மத். 15 : 24) என்னும வசனத்தையும் விலக்கியிருக்கின்றார்.

"உங்கள் சகோதரர்களுக்கு மாத்திரம் வந்தனம் செய்வீர்களேயாகில் அதிகமாய் நீங்கள் செய்கிறதென்ன? அஞ்ஞானிகளும் அப்படிச் செய்கிறதில்லையோ?" (மத். 5 : 47) என்ற வசனத்தைப் புனித லூக்காஸ் தம்முடைய சுவிசேஷத்தில் "உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கு நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் இவ்விதம் செய்கிறார்களே" (லூக். 6 : 33) என்கிறார்.

"என் நாமத்தின் நிமித்தம் எல்லாச் சனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்" (மத். 24 : 9). லூக்காஸ் இதை, "என் நாமத்தின் நிமித்தம் எல்லோராலும் பகைக்கப் படுவீர்கள்" என்று குறிப்பிடுகிறார்.

"நீங்கள் செபஞ் செய்யும்போது அஞ்ஞானிகளைப்போல் வளர்த்துச் சொல்லாதேயுங்கள்" (மத். 6 : 7) என்னும் வசனத்தை லூக்காஸ் முற்றாக விட்டுவிட்டார்.

மறுபுறத்தில் கிறீஸ்துவின் இரக்கம், புறஜாதியார், பாவிகள் மட்டில் அவர் காட்டிய தயவு முதலியனவற்றை லூக்காஸ் வற்புறுத்துகின்றார்.

நசரேத்தின் செபக்கூடத்தில் கிறீஸ்து போதிக்கும்பொழுது, "சரேப்தாவூரின் விதவைக்கும், சீரியாநாட்டு நாமானுக்கும் கடவுள் காட்டிய பராமரிப்பை" வலியுறுத்துகின்றார் (லூக். 4 : 25-27).

இன்னும் கிறீஸ்து சமேரியர் மீது காட்டிய அனுதாபத்தையும் (லூக். 9 : 52), ஆயக்காரர்மீது காட்டிய இரக்கத்தையும் (10 : 30), மனஸ்தாபப்பட்ட கள்வன்மீது காட்டிய இரக்கத்தையும் (23 : 39) குறிப்பிடுவதானது பிற சாதியாருக்குச் சார்பாக அவர் பேசுவதை வலியுறுத்துகின்றன.

கிறீஸ்துவின் பிறப்பின்பொழுது பூலோகத்தில் நல்ல மனமுள்ள மனிதர்கள் யாவருக்கும் சமாதானம்" (லூக். 2 : 14) எனக் குறிப்பிடுகின்றார். இவர் மாத்திரமே 72 சீஷர்களைக் கிறீஸ்து போதிக்க அனுப்பிய சம்பவத்தைக் குறிக்கின்றார். பன்னிரு அப்போஸ்தலர்கள் 12 கோத்திரங்களைக் குறிப்பதுபோல 72 சீடர்கள் (ஆதி. 10-ம் அதிகாரத்தில்) குறிப்பிடப்பட்ட 72 தலைமுறைகளைக் குறிக்கின்றனர் என்று திருச்சபைப் பிதாக்கள் கூறுகின்றனர். அதாவது, மனுக்குலம் முழுவதும் என்பது அர்த்தமாம்.

இனி, புனித சின்னப்பர் மனந்திருப்பியோருள் யூதர்களும் இருந்ததினால் தனது இரண்டாவது நோக்கமாக அவர்களுக்கும் தமது சுவிசேஷத்தை எழுதினார் என்று கருத இடமுண்டு.

இவரது முதல் இரண்டு அத்தியாயங்கள் பழைய ஏற்பாட்டிலிருந்து சம்பவங்களைக் குறிக்கின்றன. இவர் குறிப்பிடும் முதற்சம்பவமும் கடைசிச் சம்பவமும் ஜெருசலேம் தேவாலயத்திலேயே நடைபெற்றன. சக்கரியாசுக்கு ஓர் ஆண்மகவு பிறக்கப்போவதாகவும, இவர் இஸ்ராயேலரைத் தேவன்பால் திருப்புவார் என்றும் தேவதூதன் கூறுகின்றார் (1 : 16). அதே தேவதூதன் பரிசுத்த கன்னிமரிக்கு ஒரு குழந்தை பிறப்பார் என்றும், அதற்குத் தாவீதின் சிம்மாசனம் கொடுக்கப்படும் என்றும், அவர் யாக்கோபின் கோத்திரத்தை ஆள்வார் என்றும் குறிக்கின்றார் (1 : 32).

கன்னிமரியின் மங்கள கீதத்தில இஸ்ராயேல் அடியானைத் தேவன் கண்ணுற்றமையும (1 : 54), சக்கரியாசின் கீதத்தில், சனங்களுக்கு இரட்சணியம் அனுப்பியதற்காகச் சக்கரியாஸ் கடவுளை வாழ்த்துவதும (1 : 58), கிறீஸ்து யூதரின் இரட்சகர் என்பதும (2 : 11) குறிப்பிடப்பட்டுள்ளன.

இரட்சகரில் 'இஸ்ராயேலின் மகிமை'யைச் சிமியோன் காணகின்றார். ஆனால், "இஸ்ரவேலுக்காக காத்திருந்த இரட்சணியம்நிறைவேறிற்று" (2 : 32) என்கிறார். யூதசமயச் சடங்குகளுக்கு ஒரு தனியிடம் கொடுக்கப்படுகிறது (2 : 21-24). பாஸ்காப் பண்டிகைக்கு யூதர் ஜெருசலேமுக்குப் போவது வழக்கம் என்பதை எடுத்துக்காட்டுகின்றார் (2 : 42). யூதரின் கவனத்தை ஈர்க்கக்கூடிய வேறு குறிப்புகளும், மற்றும் பகுதிகளில் இடம்பெறுகின்றன. ஸ்நாபக அருளப்பரின் தொண்டு அன்னாஸ், கைப்பாஸ் என்பவர்களின் ஆட்சியோடு இணைக்கப்பட்டுள்ளது (3 : 1-3).

(வளரும்)

## சிந்தித்தால்



நீதிபதி: (மனைவியைப் பார்த்து) நீ ஏன் உனது கணவனிடமிருந்து விவாகரத்துக் கோருகின்றாய்?

மனைவி: இவர் குடிக்கிறார் ஐயா; குடித்துவிட்டு வந்து என்னை அடித்து ஆக்கினை பண்ணுகிறார் ஐயா; அதனால் எனது கலியாணஎழுத்தைத் தள்ளி விடுங்கள் ஐயா!

கணவன்: (நீதிபதியைப் பார்த்து) ஐயா, நான் குடித்தும் அறியேன; அடித்து ஆக்கினை பண்ணியும் அறியேன்; வேண்டுமானால் என்மூன்று குழந்தைகளும் அதோ நிற்கிறார்கள் கேட்டுப்பாருங்கள்.

பிள்ளைகள்: (12, 10, 8வயதுள்ள பிள்ளைகள் மூவரும் அழைக்கப்பட்டு வந்து) ஐயா! அப்பாவும் எங்களை அடிப்பதில்லை. அம்மாவும் அடிப்பதில்லை. ஆக்கினை பண்ணுவதுமில்லை. நாங்கள் இருவரையுமே நேசிக்கிறோம். அதனால் அவர்களுடைய கலியாண எழுத்தைத் தள்ளவேண்டாம் ஐயா.

* * *

ஆசிரியர்: வில்லி, 8இன் அரைவாசி என்ன?

வில்லி: சார், மேலும் கீழுமாக என்றால் அரைவாசி 3வரும்; குறுக்காக என்றால் அரைவாசி 0வரும்.

* * *

விருந்தாடி: தான் விடுதி விட்ட ஹோட்டலிலிருந்து வெளிகொண்டு செலவுபணத்தைக் கொடுக்கும்போது, அங்குசேவைசெய்த பையனைப்பார்த்து நான் தங்கியிருந்த 83ஆம்அறைக் கட்டிலின்கீழ் எனது சிலிப்பர்களை விட்டிட்டு வந்தேனே, ஓடிப்போய் ஒருகால் பார்த்துக்கொண்டுவா; றயிலுக்குப்போக இன்னும் ஐந்துநிமிடம் மட்டும் இருக்கிறது.

பையன்: (ஓடோடியும் சென்று ஐந்து நிமிஷங்களின்பின் இரைக்க இரைக்கத் திரும்பிஓடிவந்து) ஐயா, நீங்கள் சொன்னதுபோலப் படுக்கையின்கீழ் அவைகள் பத்திரமாக இருக்கின்றன.

* * *

தரிசிக்கவந்தவர்: இந்தப் பட்டணத்தில் பெரியபெரிய மனிதர்களெல்லாம் பிறந்திருக்கிறார்களென நான் விளங்குகிறேன்?

பட்டணவாசி: இல்லை, இங்கே பிறந்தெல்லாம் குழந்தைகள்தான் ஐயா.

* * *

ஆசிரியை: றாபி, யூலியஸ் சீஷர் எங்கே இறந்தார் தெரியுமா?

றாபி: நன்றாகத் தெரியும் ரீச்சர். எங்கள் சரித்திரப்புத்தகத்தில் 26ஆம் பக்கத்தில்தான்.

## மகாத்மாகாந்தியின் மொழிகள்

நான் கடவுளை
நேருக்கு நேராகக்
காண விரும்புகிறேன்.
உண்மைதான்
கடவுள் என்று
எனக்குத் தெரியும்.
என்னைப் பொறுத்தமட்டிலும்
கடவுளை அறியப் பயன்படும்
ஒரே சாதனம்
அஹிம்சை என்பதுதான்.

கடவுள் ஒருவரே என்று
நான் நம்புகிறேன்.
அதனால் மனித சமூகம் முழுவதுமே
ஒன்றுதான் என்று
நான் கருதுகிறேன்.

பொதுவாகவே,
ஜனங்கள் உண்மையில் அழகைக்
காணத் தவறிவிடுகிறார்கள்.
உண்மையில்
அழகைக் காணும்
சக்தியற்ற குருடனாகவே
சாதாரண மனிதன் இருக்கிறான்.

மனிதர்கள்
எப்பொழுது உண்மையில்
அழகைக் காணத் தொடங்கு
[கிறார்களோ,
அப்பொழுதுதான்
உண்மைக் கலையும் பிறக்கிறது.

"நான்", "எனது" என்ற
இரண்டையும் மதம்,
அரசியல், பொருளாதாரம் [டால்,
முதலியவற்றிலிருந்து ஒழித்துவிட்
உடனே நாம் விடுதலை பெற்றுவிடு
[வோம்,
தெய்வலோகத்தையும் பூலோகத்துக்
[குக்
கொண்டுவந்து விடுவோம்.

நம்மைச் சுற்றிலும்
நமக்குள்ளேயும் உள்ள
ஒவ்வொரு அணுவிலும்
கடவுள் இருக்கிறார்.
ஆனால்,
தாம் விரும்புகிறவர்களுக்குத்தான்
அவர் பிரத்தியக்ஷமாகிறார்.
இந்த உரிமையை
அவர் தம்முடைய உரிமையாகவே
வைத்துக் கொண்டிருக்கிறார்.

## மனிதன் அஞ்சும் மரணம்

"வாகரை வாணன்"

—:—

பஞ்சணையிற் துயில்வோனும்
பாயின்றித் தரையில்
படுத்துக் கிடப்போனும்
கொஞ்சுமிளம் மங்கையோடு
கூடிக் கதைபேசி
குலவி மகிழ்வோனும்
வஞ்சகச்சாவு என்றால்
வானிடி கேட்டஞ்சும்
வல்லரவு போல
நெஞ்சு கலங்கி நடுங்கி
நினைவு தடுமாறுகிறான்!

எத்தனையோ கற்றவனும்
எள்ளளவு கூட
எதுவுமே அறியாத
சுத்தமடையனும்
சுயஅறிவு இழந்து ஏதேதோ
சொல்லிச் சொல்லிச் சிரிக்கும்
பித்துப் பிடித்தோனும்
பெருகுகின்ற துயரினால்
பிள்ளைபோற் பேதலித்து
கத்திக் கதறுகிறான்
'காலமானார்' என்றுசொன்னால்!

முற்றுந் துறந்தோனும்
மோகவெறி வளர்ந்ததால்
முல்லைமலர்ப் பெண்களில்
பற்றுமிகக் கொண்டோனும்
பாருக்காகத் தம்வாழ்வை
பரித்தியாகம் செய்த
உற்றநற் தொண்டனும்
உலகிலே மரணம்என்றால்
உள்ளம் கலங்க, அடி
அற்ற மரம்போல
அலறி வீழ்கிறான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமலன் காட்டிய வழி

— நீ. மரிய சேவியர் —

(சென்றவாரத் தொடர்ச்சி)

**யேசு :**

அவனைக் காயப்படுத்திக் குற்றுயிராய் விட்டுச் சென்றார்கள்...... அதே வழியால் ஒரு குருவும் செல்ல நேர்ந்தது.

**குரு :**

ம்...... இது ஏது...... யாரோ விழுந்தல்லவோ...... அடடா...... என்ன இரத்தம்போல் சிவந்து... இரத்தம்...... காயம்...... யாரோ?...... ஊர் பேர் தெரியாதவனுக்கு உதவி செய்யப் போனால் ஆபத்து வரலாம்!...... வீணாகச் சிக்கலுக்குள் மாட்டிக் கொள்ளக் கூடாது.

**அவன் :**

ஆ...... ஆ...... ஆ...... ஆ......

**குரு :**

பார்க்கப் பரிதாபமாகத்தான் இருக்கிறது. ஒரு சில வேளை ஆண்டவனாகப் பார்த்து இவனுக்கு இந்தத் தண்டனையைக் கொடுத்திருக்கலாம் ... எதற்கும் நாம் ஏன் அவசியம் இல்லாமல் மாட்டுப்பட வேண்டும். நான் இங்கு நிற்கவே கூடாது ......

பாடல்

**வழிமீது பழி நேர்ந்தால் விழி மூடவோ — அழும்**
**குரலுக்குச் செவி சாய்க்கும் அருள் இல்லையோ —**
**வீண் சொல்லிலே விலையில்லை மனிதா — உன்**
**செயலுக்கு நிலை வேண்டின் அன்பு செய் வாழ்வாய்.**

**யேசு :**

குரு அவனைக் கண்டும் விலகிச் சென்றார். அவ்விதமே ஆலயத்தில் வழிபாடுநடத்தும் குருவுக்குத் துணைசெய்யும் பணியாளன் ஒருவனும் அவ்விடத்துக்கு வந்து .........

**லேவியன் :**

ங...... ங...... இது என்ன கோரக்காட்சி. யாரோ ஒருவன் குற்றுயிராய்க் கிடக்கிறான் ..... பாவம்! என்னால் என்ன செய்யமுடியும்? ... அவனைத் தொட்டாலே தீட்டுப் படலாம் ......பிறகு ஆலயத்தில் வழிபாடும் செய்ய இயலாது. இவனை இப்படியே விட்டுச் செல்வதுதான் உத்தமம்......

பாடல்

**தப்பித்தான் செல்வதற்குச் சட்டம் துணைசெய்ய**
**மெய்ப்பக்தி உணராமல் — மெல்ல அகன்றிடுதல்**
**அன்பிற்கும் கருணைக்கும் அழிவுதரவல்ல**
**வன்மனமே புன்மனமே காண்.**

**யேசு :**

ஆனால், அவ்வழியே பயணம் செய்துகொண்டிருந்த சமாரியன் — விலக்கப்பட்ட ஒருவன் அவன் அருகில்வந்து அவனைக் கண்டு .....

**சமாரி :**

ஐயோ பாவம்! இவன் கொள்ளைக்காரர் கையில்தான் சிக்குண்டிருக்க வேண்டும். இரத்தம் அதிகமாய்ப் போய்விட்டது. படுபாவிகள்! ... உடைகளையாவது விட்டார்களா? பரிதாபம்! ... முதுகிலே நல்லகாயங்கள்..... நல்லவேளை இன்னும் உயிருடன் இருக்கிறான். ஏதாவது பருகக் கொடுப்போம். குடி......... குடி......... (அனுங்கல்).

அடித்தாலும் இப்படியா அடிக்கவேண்டும்! பணத்திற்கு ஆசைப்பட்டு, படுகாயத்தையும் ஏன் விளைக்க வேண்டும்? இப்போது அறிவு வருகிறது.....

**அவன் :**

கள்வர்—கொள்ளை—பணம்—அடி—உதை.

**சமாரி :**

பயப்படவேண்டாம். எல்லாம் சரிவரும்; நான் நண்பன் தான்.

பாடல்

**அன்பினால் உருகி உள்ளம் அயலவன் துயரம் கண்டு**
**துன்பமே துடைப்பேன் நன்றே எண்ணெயும் ரசமும் கொண்டு**
**இக்கணம் விரைந்து யான்போய் சத்திரம் ஒன்றில் சேர்ந்து**
**எப்பணம் வந்தபோதும் எளியவன் துணையுமாவேன்.**

**யேசு :**

எண்ணெயும், திராட்ச ரசமும் வார்த்து அவன் காயங்களைக் கட்டித் தன் சொந்த வாகனத்தில் ஏற்றி ஒரு தங்குமடத்திற்குக் கொண்டுபோய் அவனைக் கண்காணித்தான். மறு நாள்........

**சமாரி :**

ஐயா! வருத்தக்காரன் விரைவில் சுகமடைய வேண்டும்! ஆனால், நான் என்னுடைய பயணத்தைத் தொடர வேண்டியிருக்கிறது.........

**த. மடம் :**

அவனுக்குச் சொற்ப சுகமாவது வர இன்னும் சில நாட்களாவது செல்லுமே! .....

**சமாரி :**

பரவாயில்லை; இதோ, இரண்டு வெள்ளிக் காசுகள். நான் மீண்டும் இங்கு திரும்பிவருமட்டும் இவனைப் பார்த்துக்கொள்ளும். உம்முடைய சகோதரனைப்போல் கவனித்துக் கொள்ளும். வேறு ஏதாவது செலவுவந்தால்......நான் திரும்பிவரும்போது அந்தப்பணத்தை உமக்குத் தருவேன்.

[வரும்]

# கடவுள்தந்த இருமலர்கள்

சி. எ. செல்வராசா

**குலரத்தினம் தொடர்ந்து கூறுவது :**

அன்று விடுமுறைநாள். நான் நமக்குச் சொந்தமான சவுக்கம் தோப்புக்குள் காற்று வாங்கப் போவது வழக்கம். அன்றும் அப்படியே காற்று வாங்கப் போனேன். மாலை நாலுமணியிருக்கும். காற்று ஒருவித ஓசையுடன் வீசிக்கொண்டிருந்தது. தோப்பின் பக்கவாட்டில் நெடுஞ்சாலை இருந்தது. நான் அமைதியாக உட்கார்ந்து என் 'மவுத் ஆர்கனை' எடுத்து வாசித்துக் கொண்டிருந்தேன். இடையிடையே, பஸ்வண்டிகளும்; லாரிகளும், கார்களும் தூசியை எழுப்பிய வண்ணம் போய்க்கொண்டிருந்தன.

எதிர்பாராதவிதமாக அந்த வழியே பங்கிராஸ் துவிச்சக்கர வண்டியில் வந்துகொண்டிருந்தான். என்னைக் கண்டதும் மெல்லச் சிரித்தான்.

"என்ன பங்கிராஸ், எங்கு போய்வருகிறாய்?"

"நான் தோலகட்டிக்குப் போய்வருகிறேன்."

"பையில் என்ன இருக்கிறது."

"ஒஸ்தியப்பமும், இரசமும்."

"ஓ...சுவாமியாருக்கா!"

"ஆமாம்."

"பங்கிராஸ், ரொம்பக்களைத்திருக்கிறாய். சிறிது இளைப்பாறிப் போகலாம்; இங்கே உட்காரும்."

"ஆம், மிகநன்றி."

"சரி, பங்கிராஸ் எப்படியிருக்கிறாய்? வீட்டில் உள்ளோர்?..."

"குலரத்தினம், எனக்கு இருக்கும் தொல்லைகள் உமக்குத் தெரியும்தானே?"

"என்னப்பா சொல்லுகிறாய்?"

"என் குடும்ப வரலாறுதான்!"

"உன் துயரத்தை என்னிடம் சொல்லப்பா! முடிந்த வரை உதவி செய்கிறேன். மேலும், நம்மிடம் உள்ள துயரங்களை மற்றவரிடம் சொன்னால் மனப்பாரம் குறையுமில்லையா?" "குலம், உங்கள் ஆறுதல் வார்த்தைகளுக்கு ரொம்ப நன்றி! என் அப்பாவை உனக்குத் தெரியும் தானே. அவர் பெயர் சூசை. எனக்கு ஒரு தம்பியும்; இருதங்கைகளும்; ஓர் அக்காவும் உண்டு. என தாயோ தீராதநோயாளி. எம் குடும்பத்தைக் காப்பாற்ற என் அப்பா மாடாக உழைத்து ஓடாகமாறிவிட்டார். ஆ!......வீட்டில் வறுமை! வயிறுபட்டினி!! மனதில்சஞ்சலம்! ஒருவேளை உணவு கிடைக்கிறது. மறுவேளை உணவு கிடைக்குமோ கிடையாதோ சந்தேகம். அத்துடன் நின்றால் போதாதா? என் அப்பா ஒரு குடிகாரர். எவ்வளவு சொல்லியும் கேட்கமாட்டார். நீயா எனக்குப் புத்தி சொல்வது என்று என்னை அறைந்துவிடுவார். அவர் கூலி வேலைதான் செய்கிறார். தினமும் மூன்று நான்கு ரூபாய்கள்தான் கிடைக்கும். அவர் தினமும் குடித்துவிட்டு வந்து இரண்டு ரூபாவை வீட்டில் கொண்டுவந்து வீசுவார். ஆ!......என வாழ்க்கையை நினைக்க நினைக்க எனக்கு இருதயம் நின்று விடும்போல் தோன்றுகிறது. ஆ!...யேசுவே...எவ்வளவு இன்னல்கள் துன்பங்கள். ஆனால்......ஒரு தைரியம்! யேசு, இறைமகன், மண்ணவரை மீட்கவந்த விண்ணரசர் அவரை நினைத்துத்தான் சிறிது ஆறுதல்! அமைதி!!

யேசுவே! என் சிறியவயதில் எவ்வளவு கஷ்டங்கள்! எவ்வளவு துன்பங்கள்!! ஆ...... எத்தனை நாள் பாயின்றி படுத்திருக்கிறேன். உணவின்றி உறங்கியிருக்கிறேன். தினமும் எனது அப்பா வேலைவிட்டு வரும்போது போதையில்தான் வருவார். சொல்லவேண்டுமா? என சகோதரர்களைப் புடைப்பார். அன்னையை அடிப்பார். என்னை உதைப்பார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையில் பயம் ... ஆயினும் அன்பர் யேசு பட்டதுன்பங்கள் முன் என் துன்பம் எவ்வளவு அற்பமானது. இதை நினைத்துத்தான் ஆறுதல் அடைகிறேன். "பங்கிராஸ் உன் நிலையை நினைத்து வருந்துகிறேன். உன்படிப்பு, உணவு, உடை இவைகளுக்கு எப்படிப்பணம் கிடைக்கிறது?"

"கல்லினுள் தேரைக்கும், கருப்பைக்குள் சிசுவுக்கும், உணவூட்டும் இறைவன் என்னையும் ஊட்டுகிறார்!"

"என்ன புதிர் போடுகிறாய்?"

"நம் பங்குக்குரவர் வண. அமலதாசனுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்கிறேன். அவரும் தன்னால் முடிந்த உதவிகளை எனக்குச் செய்கிறார்!"

"பங்கிராஸ் உன் விதி இப்படி உன்னை ஆட்டிப் படைக்கிறது!"

"குலம், அப்படிச் சொல்லாதே விதிஎன்ற ஒன்று உலகில் இல்லை."

"அப்படியானால் நீயும் நானும் அனுபவிப்பது?"

"ஆண்டவன் சித்தம்."

"ஆண்டவராவது ஆட்டுக்குட்டியாவது?"

"அப்படியெல்லாம் சொல்லாதே! முதுகில் இருந்து கொண்டு காதைக் கடிப்பது போல் இருக்கிறது உன் செயல்!"

"பங்கிராஸ், உன் துன்பத்தைத் துடைக்க இன்னலை ஒழிக்க ஓர்வழி இருக்கிறது!"

"அப்படியா"

"அதற்கு நீ எவ்வித துன்பமும்பட வேண்டியதில்லை!"

"தயவுசெய்து அவ்வழியைச் சொல்லப்பா?"

"பங்கிராஸ் வேறு எதுவுமல்ல, நமது குழுவில் சேர்ந்துவிடு; உனக்கு எவ்விதகவலையும் குறையுமிராது!"

"குழு... அது என்னகுழு?"

"நம் வகுப்பில், செல்வனின் தலைமையில் அமைந்திருக்கும் கூட்டம்தான்."

"அப்புறம்"

"நீ பூசை உதவி செய்யக்கூடாது. குருவானவரிடம் பழகக்கூடாது. தேவதிரவிய அனுமானங்களைப் பெறக்கூடாது! கோயிலுக்குப் போகக்கூடாது."

"சீ!...வாயை மூடு. குழு... அதற்குத்தலைவன்... அழகான பெயர். புலியின்மேல் புதுப் பட்டுப் போட்டிருக்கிறீர்கள். அப்போர்வையில் நடக்கும் அட்டகாசங்கள் எல்லாம்எனக்குத் தெரியும். படித்தவாலிபரே சிந்தனைக்கு சிறிது வேலை கொடுங்கள். ஆண்டவருக்கு அடிபணிந்து வாழ்பவர்களையும், அவர்கள் அடையும் நன்மைகளையும் சிந்தியுங்கள். ஆண்டவரின் அரவணைப்பில் இருப்பவனுக்கு எந்த நன்மையும் குறைவுபடாது. கேவலம்! கிறீஸ்தவர்களா நீங்கள்...சீ!... இன்றே உங்கள் பெயரை எடுத்துவிடுங்கள். கேவலம்! ஆண்டவர் அன்பிலே, அவர் அரவணைப்பிலே இன்பம் காண வேண்டிய இளம் காளைகளே நீங்கள் இப்படிச் சீர்கெட்டால் எதிர்காலஉலகு எப்படி உருளும்.

"போதும் நிறுத்து."

"எதற்காக மறைக்க வேண்டும்! உண்மையை மறுக்கவா?

"யேசுவிடம் ஏது இன்பம்?...யேசு......யேசு...... என்று உளறுகிறாயே?"

"இன்பமா? அவரிடமா? இல்லையா? உன்புத்தி புதைந்துவிட்டதா? அறிவு அழிந்துவிட்டதா? ஆண்டவரின் இனிமைதனை சுவைத்துப்பார் என்னும்வார்த்தைகளை நினைத்துப்பார்."

"போய்வா! போதும் பிரசங்கம்."

"போகிறேன் ஆனால் உங்கள் குழுவிலும் கூட்டத்திலும் வரமாட்டேன்."

ஆம்!......பங்கிராஸ் போகிறான்....இல்லை....மறுகிறீஸ்து போகிறார்!! [வரும்]

## மரணசெய்தி

மலேசியா நாட்டில் உத்தியோகம் பார்த்து இளைப்பாறிய திரு. யோசேப் சவிரிமுத்து மார்படைப்பு நோயின் காரணமாக, தமது 75-ம் பராயத்தில் சென்ற 10-ந்தேதி சனிக்கிழமை அந்திய தேவதிரவிய அனுமானங்களைப் பெற்று பரமபதமடைந்தார். இவர் ஓர் உத்தம கத்தோலிக்கர். வேதப்பரப்புதல் வேலைகட்குத் தாராளமாய் உதவியிருக்கிறார். இவருக்கு 2 புத்திரரும் 4புத்திரிகளும் அநேகம் பேரப்பிள்ளைகளும் உளர். 2 புத்திரிகள், றெஜினா ஜேக்கப், மேரி யோசப் மலேசியாவில் இருக்கின்றனர் — 2புத்திரர்கள், நீக்கிலஸ், இளைப்பாறிய புகையிரத உத்தியோகஸ்தர். லோறன்ஸ், சுகாதார உத்தியோகஸ்தர், சலாபம் புஷ்பம்விக்ரோறியா யோசவ், ஜேன் தெரேஸ் செல்லையா இலங்கை வாசிகள். இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

● பிரித்தானிய பாராளுமன்றத்திலே அதிகம் இளவயதுள்ள — அதாவது 22 வயதுடைய செலவி பேர்னடெற் டெவ்ளின் எனும் கத்தோலிக்க பெண்மணி எம். பி. ஆகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றாள். இளவயதுள்ள ஒரு பெண்மணி எம். பி. ஆக இதற்குமுன ஒருபோதுமே தெரிவுசெய்யப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன கருவிகள் நற்செய்தியின் பணியிலே

ஆண்டவரின் ஆரோகணத் திருநாளை அடுத்துவரும் ஞாயிறு, சமூகத் தொடர்புக் கருவிகள் தினமாக (World Communications Day) திருச்சபையினால் அனுசரிக்கப்படுகின்றது. இன்று மனித குலம் முழுவதையும் இயல்பாக அடைந்து, அவர்களை, ஒன்றாக இணைத்து, அன்பிலும் சகோதரத்துவத்திலும் வளர்க்கவல்ல கருவிகளின் வகையும் தொகையும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. (ச. தொ. க. 1–2) அச்சுவெளியீடு, இசைச்சித்திரம் இவைகளுடன் நின்றுவிடாது, வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி இவைகளும் சமூகத் தொடர்புகளை அதிகரித்து உலகை ஓர் பெரிய நகரமாக்குகின்றன. இந்த கருவிகள் செய்திகளையும் நற்சிந்தனைகளையும் மக்களிடையே பரப்பக்கூடியன என்ற மட்டிலும், மனிதர்க்கு ஓய்வு (recreation) அளித்து உள்ளத்தைப் பண்படுத்த வல்லன என்ற மட்டிலும், திருச்சபை இவைகள்மேல் அயராத விழிப்பும் அக்கறையும் காட்டுகின்றது. இதை உணர்த்தவே கிறீஸ்தவ உலகம்முழுவதன் அனுசாரத்திற்கும் திருச்சபை இந்நாளைக் கொடுக்கிறது. (ச. தொ. க. 18)

**கண்டிப்பது போதாது:**

இக்கருவிகள் விளைவிக்கும் தீமைகளைக் கூர்மையாகக் கண்டுபிடித்து அவற்றைக் கண்டிப்பதைத்தவிர திருச்சபைக்கு அவற்றோடு வேறு எந்தத் தொடர்பும் கிடையாது எனப்பல குருக்களும் கிறீஸ்தவர்களும் எண்ணியிருந்தனர். (எட்மன்ட் பெக்கர், சங். ஏடு 332 பக்) ஆனால், வத்திக்கான் சங்கம் இத்தப்பபிப்பிராயத்திற்கு முற்றுப் புள்ளியிட்டது. கடவுளின் கொடைகளென்று பன்னிரண்டாம் பத்திநாதர் அழைக்கும் இக்கருவிகளை ஆக்கமுறையான வழிகளில் பாவித்துப் பயனடையும் விதத்தை திருச்சங்கம் கற்றுக்கொடுக்கின்றது.

**பத்திரிகை, சஞ்சிகைகள்:**

கிறீஸ்தவ சமுதாயத்திலே, கிறீஸ்தவ உண்மைகளை அறியப்படுத்தவும், கிறீஸ்தவ உணர்வை முழுமையாய் வளர்க்கவும் கத்தோலிக்க பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இன்றியமையாதன. இவைகளின் வாயிலாக திருச்சபையின் முதற்பணியான நற்செய்தி அறிவிக்கும் பணியைச்செய்ய முடியும். அத்துடன் கிறீஸ்தவ சமுதாயத்திலே உரையாடல், பணி, ஒத்துழைப்பு இவைகளுக்கு ஊக்கம் ஊட்டவும் உதவுகின்றன. இதனால்தான் திருச்சங்கம், கத்தோலிக்க பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வளர்ப்பதில் ஆயர், குருக்கள், பொதுநிலையினர் சகலரும், கூடின கரிசனையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் இயங்கவேண்டுமென்று விரும்புகின்றது.

எங்கள் சமுதாயத்திலே இதற்காக உழைக்கும் ஸ்தாபனங்கள் பல. ஈழத்தில் வெளியாகும் காவலன், தமிழகத்தில் இருந்துவரும் கத்தோலிக்கசேவை, தோழன், ஞானதூதன், திருஇருதயத்தூதன், சர்வவியாபி இவைகள் அனைத்தையும் மனமுவந்து ஆதரிக்கவேண்டியது நமது கடன். இவ்வெளியீடுகள் வாயிலாக பொதுமக்களின் கருத்துக்களை உருவாக்கவும், உறுதிப்படுத்தவும், திருவாட்சி அமைப்பை அல்லது அப்போஸ்தொலிக்க தொண்டுபுரியும் சபைகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, சகலபொதுநிலையினரும் முன்வரவேண்டும். (ச. தொ. க. 14)

**வானொலி, திரைப்படம், இசைச்சித்திரம்**

தின்மையை மாத்திரம் தரக்கூடியது என்று சொல்லி வானொலி, திரைப்படம், இசைச்சித்திரம் இவைகளை மனிதனை முன்னேற்றும்பணியிலோ மறைபரப்பும் பணியிலே பயன்படுத்த திருச்சபை முற்போக்காகச் சென்ற காலத்தில் இயங்காதது மனவருத்தத்துக்குரியது. ஆனால் திருச்சங்கம் ஆரம்பித்த மறுமலர்ச்சியுடன் இவைகளை எம் உன்னத பணிக்குப் பாவிக்கப் பலவித முயற்சிகள் செய்யப்படுகின்றன. இலங்கை வானொலியில் நடாத்தப்படும் காலைச்சிந்தனைகள், மறைநாடகச் சித்திரங்கள், மறைக் கருத்தரங்குகள் இவைகளை அதிகரிப்பதற்கு நமது திருஆட்சிஅமைப்பாளர் முயற்சிசெய்யவேண்டும். இந்த விஷயத்தில், அண்மையில் பிலிப்பைன்தீவின் மாநகரமான மனில்லாவில் ஆரம்பிக்கப்பட்ட கத்தோலிக்க "Radio Veritas" மிகவும் வரவேற்கத்தக்கது ஆனால் இதிலிருந்து தமிழில் வெளியாகும் நிகழ்ச்சிகளின் தொகையும், வகையும் எமது கரிசனையில் தங்கியிருக்கின்றன.

உலகத்திலே தொகையாகத் திரைப்படங்களைத் தயாரிப்பதில் இரண்டாவது இடத்தைப் பெற்றது பாரதம். ஆனால் இவைகளில் நல்லொழுக்கத்தை வளர்த்து மனிதனை அவனது உயர்ந்த முடிவுக்கு இட்டுச் செல்லுவதற்கு ஏதுவானவை எத்தனை? விசேடமாக இளைஞர்கள் இவைகளினால் கூடிய அழிவை அடைகிறார்களேயொழிய உண்மையிலும், நன்மையிலும் வளர்கிறார்களில்லை. ஆகையினால் இவைகளைத் தயாரிப்பவர்கள் வியாபாரத்தையல்ல பொதுமக்களின் நல்வாழ்வையே முதல் நோக்காகக்கொள்ளவேண்டும். அத்துடன் இவைகளைப் பயன்படுத்துவோர் அவைகளை அளவோடும் அறநெறிக் கட்டுப்பாடோடும், பயன்படுத்தி, புண்ணியத்திலும் அறிவிலும் வளர ஏதுவானவைகளுக்கே முழுஆதாவு அளிக்கவேண்டும்.

கத்தோலிக்க கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட நாடகங்களையும், இசைச்சித்திரங்களையும் தயாரித்து அளிப்பதில் நாம் ஊக்கம் காட்டவேண்டும். அண்மையில் எத்தனையோ இடங்களிலே திருப்பாடுகளின் காட்சி அழகாகத் தயாரித்துப் பயனுடன் அளிக்கப்பட்டது. இதைப்போல் நற்செய்தியைவிளக்கும் சம்பவங்களையும் உவமைகளையும் இசைச்சித்திரமாக்கி அளிப்பது மிகவும் பயன்தரும். இதற்காக பங்குகளில் அல்லது வட்டாரங்களில் மறைநாடகக் குழுக்களை நடத்துவது கிறீஸ்தவ சமுதாயத்தின அப்போஸ்தொலிக்க பணியாகும்.

எஸ். யே. இம்மனுவேல்

# கலைக்கும் ஓர்விலை

— நீ. மரியசேவியர்

குன்றிலும், கும்பிடும் கூடத்திலும், குடிமக்கள், குழுமிய குறிச்சியிலும், குமுறும் அலைபடியும் குருமண் கடல் ஓரத்திலும், குருபரன் யேசுவின் குரல் ஒலி எழுந்தது. மக்கள் செவிகளிலும், மாறுபட்ட மனங்களிலும் விழுந்தது. எங்கெல்லாம் எப்படி எல்லாம் — எவ்வாறு எல்லாம் ஆண்டவன் வார்த்தை அகிலத்திற்கு அறிவிக்க முடிந்ததோ அவ்வழிவகைகளை மேற்கொண்டார் இறைமகன் கிறீஸ்து. அன்றிருந்து இன்றுவரை — இரண்டாயிரம் ஆண்டுகளின் வரலாற்று ஓட்டத்தில் மனிதன், தன் கருத்துக்களைப் பரப்பும் கருவிகளைக்கண்டுபிடிப்பதிலும், கையாளும் முறைகளிலும், முன்னேற்றம் கண்டிருக்கிறான். உதாரணமாக, வானொலியும்— திரைப்படமும் — தூரஒலிக்காட்சியும் நவீன கண்டுபிடிப்புக்கள். இவைகளைஎல்லாம் நாமும், கடவுளின் நற்செய்தியைப் பரப்பும் வலிமைவாய்ந்த கருவிகளாகக் கணித்தும் பயன்படுத்தவும் வேண்டும்.

## நாடகம்

கலையின் கோலத்திலே கடவுளைக் கண்டு கரம்கூப்பி வணங்கியது கருத்துநிறைந்த தமிழகம்! கலையின் தோற்றத்தைத் தெய்வீக ஏற்றத்துடன் இணைத்து இன்புற்ற தமிழர்கள்மத்தியில், அன்றும் சரி இன்றும் சரி நாடகத்திற்கு ஒரு தனிமதிப்பு இருந்து வருகிறது. நாடகம் என்றால், படித்தவரும் பாமரரும் ஓடுகிறார்கள் — பணக்காரரும் பரம ஏழைகளும் விருப்புடன் நாடுகிறார்கள். சமூகத்தில் புரையோடும் ஊழல்களை எடுத்துரைக்க—சமுதாயச் சூழலைச் சீர்திருத்த, உள்ளங்களை மகிழ்விக்க, உயர்வுணர்ச்சிகட்கு உயிர்த்துடிப்புக் கொடுக்க ஒரு சிறந்த வழியாக — இயல்இசை இசைந்தோடும் மொழியாக — கையாளப்படும் இதை—இறைவனின் வார்த்தையை விதைக்கப் பயன்படுத்தும் ஒரு கருவியாகப் பாவிக்கவேண்டும். நேரடியாகவோ, மறைமுகமாகவோ, எமது சமயக் கருத்துக்களை எடுத்துரைக்கும்— (பார்ப்பவர்கட்குக் கருத்துக்களைத் திணிப்பது நல்ல நாடகத்தின் குணமல்ல)—நாடகங்களைத் தயாரிக்கும் மன்றங்கள் எம்மவர் மத்தியில் உருவாக வேண்டும் பணம் வசூலிக்கும் நோக்குடன் அல்ல, பரமனின் பண்புயர் கருத்துக்களைப் பார் முழுதும்பரப்பும் நோக்குடனே —நவீன மேடைச் சாதனங்களைப் பயன்படுத்தித் தமிழ் மணம் கமழும் நடிக சித்திரங்கள் உருவாக்கப்படவேண்டும்.

## வானொலி

பஸ் வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. வயதுசென்ற அம்மணி ஒருத்தி எழுப்பிய கேள்வி இது, "நீங்கள்தானா சென்ற திங்கள் ரேடியோவில் பிரசங்கம் செய்தது?" அவள் ஓர் சைவப் பெண்...... வீதியிலே வண்டியொன்றில் வீச்சாகப் போய்க்கொண்டிருந்தான் ஒரு வாலிபன். சடுதியாக எதையோ நினைத்தவன்போல திரும்பிவந்து 'ரேடியோவில் உங்களுடைய நிகழ்ச்சி நன்றாக அமைந்திருந்தது' என்றான் இன்முகத்துடன். கொழும்பில் உத்தியோகமாயிருக்கும் இளைஞன் ஒருவனின் பாராட்டுக் குரல் அது........ நாம் கருதுவதிலும் மேல் அதிகமானோர் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்கிறார்கள். நல்லதையும் தீயதையும் ஏற்கிறார்கள். நல்லதை—நற்செய்தியை நல்ல முறையில் நாலுபேரும் நவில ஒரு நல்ல வழி வானொலி. வீட்டிற்கு ஒரு வானொலிப் பெட்டியிருக்கும்காலமிது. காலை தொட்டு மாலைவரை இசை ஒலிக்கும் காலமிது. தமிழகக் கத்தோலிக்கர் இலங்கை வானொலி அளிக்கும் வாய்ப்புக்களைத் திறம்படப் பயன்படுத்த வேண்டும். கத்தோலிக்கரல்லாத மக்களுக்கும் எமது கருத்துக்களை அவர்களுக்குப் பிடித்தமான வகையில் எமது கலாச்சாரத்திற்கு ஏற்ற முறையில் வழங்க வானொலி அளிக்கின்றது ஒரு வாய்ப்பை. எமது தமிழ்க் கத்தோலிக்க நிகழ்ச்சிகளில் இறைவார்த்தையின் எழிலும் தமிழ் மணமும்—வளமும் செழித்துக் காணப்படவேண்டும். நமது கலாச்சாரத்தை வேண்டிய அளவு பயன்படுத்தாது பின்தங்கிநிற்கிறோம் என்பதற்கு இதோ ஒரு எடுத்துக்காட்டு.

திருமறைக் கலாமன்றத்தின்ரின் 'சாவை வென்ற சத்தியன் என்னும் வானொலி இசை—உரை நாடகச் சித்திரத்தின் ஒலிப்பதிவிற்குத் 'தாம்பூரா' என்னும் இசைக்கருவி தேவைப்பட்டது. நிலையத்தில் இதற்குப் பொறுப்பானவரிடம் சென்று கேட்டபொழுது, 'கத்தோலிக்கரும் இதைப் பயன்படுத்துகிறார்களா? என்ற வியப்பான வினாவை எழுப்பினார்

நேயர்களிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள்—விமர்சனக் கடிதங்கள் — தயாரிப்பாளருக்குக் கிடைத்தால்தான் நிகழ்ச்சிகளைச் சிறப்பாக அமைக்க முடியும். இதைப்பொறுத்த மட்டில் ஏனோதானோ என்ற கத்தோலிக்கரின் மனப்பான்மை வருந்தத்தக்குரியது.

## திரைப்படம்

படம்பார்ப்பது பாவம் என்ற பழங்காலக் கருத்து மறைந்துவிட்டது. பட்டினியாய்க்கிடப்பவனும்—பாடுபட்டு உழைப்பவனும் — படம்பார்ப்பதை ஒரு பொழுது போக்காகக் கொண்டிருக்கும் காலம் இது. திரைப்படம் தன்னிலேதானே கெட்டது அல்ல. சினிமா ஒரு உயர்ந்த நுண்ணியகலை. சிறந்த சமூகக் கருவி! இதனால் அது கெட்ட விளைவுகளைத் தரவில்லை என்று சொல்ல முடியா, இருந்தும், அழகியபாடல், இதமான வசனம்—சுவையான கதை—திறமான கண்கவர்காட்சி அமைப்புக்கள் மூலம் நல்ல கருத்துக்களை மனதில்பதியச்செய்ய இது ஒரு அரும்பெரும் சாதனம்!

"என்னதான் முடிவு" என்ற படத்தில் அண்ணன் தம்பிக்கு அறிவுரை நிகழ்த்தும் ஒருகட்டம். "மூன்று மணித்தியாலங்களாய்ச் சிலுவையிலே தொங்கினாரே கிறிஸ்து பெருமான்—அவர் தன்னை வதைத்தவர்களை மன்னித்தார்" என்ற கருத்துப் படக் கூறப்பட்ட வசனம் உண்

(தொடர்ச்சி மறுபக்கம்)

## திருமறைக் கலாமன்றம்

பலருடைய—சிறப்பாக இந்துமக்களுடைய பாராட்டுக்களைப்பெற்ற "கல்வாரியில் கடவுள்" — "சாவை வென்ற சத்தியன்" — "அன்பில் மலர்ந்த அமரகாவியம்" என்னும் பிரமாண்டமான மேடை இசை–உரை-நாடகச் சித்திரங்களைத் தயாரிக்கும் திருமறைக் கலாமன்றம் வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சிகளிலும் அடிக்கடி பங்குபற்றுகிறது. கலையைத் துணைகொண்டு - திருமறையாம் இறைமறைக்கு முறை தவறாப் பணிபுரியும் இலட்சியத்துடன் — இயங்கும் இம்மன்றம் இன—இட—சாதி பேதமற்ற கணக்கிடமுடியாத இளம் கலைஞர்களைக் — கவிஞர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது

"திருமறை மக்கள் நாம் என்போம் — ஒன்றே இறைவன குலமென்போம்" என்று ஒலிக்கிறது இதன் எழுச்சிக் கீதம்.

"பரலோக பாதையின் ஒளியாயிருப்பது விசுவாசம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வத்திக்கானின் புதியபிரதமர்

63வயதான பிரான்சிய கருதினல் யோண்வியோ வத்திக்கான் நகரத்தை ஆண்டுநடத்தும் காரியதரிசியாக பரி. தந்தையினல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 86வயதுநிரம்பிய இத்தாலியகருதினல் சிக்கோஞானியின் இடத்தை எடுக்கின்றார். கடந்த 200வருடங்களிலும் முதல்தடவையாக இப்பதவியை வகிக்கும் பிரான்சிய தேசத்தவர் இவரே. இவரின் நியமனம் பரிசுத்த ஸ்தானத்திலே இருக்கும்முக்கிய பதவிகளைப் பலநாட்டுப்பிரமுகர்களிடையே பகிர்ந்துகொடுக்கும் திட்டத்தின் ஆரம்பநடவடிக்கையாகத் தோன்றுகிறது.



வண. றெக்ஸ் குலாஸ் அடிகள்.



வண. எமிலியானுஸ் மொருய்ஸ அடிகள.

இவ்விருவரும் 14-5-69 புதன்கிழமை யாழ். பேராலயத்தில் திரளான குருமார், கன்னியர், இனசனர், மற்றும் விசுவாசிகள் மத்தியில் யாழ். துணை ஆயர் அன்ரனி ஆண்டகையால் குருபதவிக்கு உயர்த்தப்பட்டனர். இவ்விரு புதிய குருமாருக்கும் 'காவலன்' தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றான்.

## நல்வாசினை......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நம் உடலையும் (உளத்தையும்) சீர்குலைத்து விடுகிறது. இன்னும் எத்தனையோ பாவங்களுக்கு எம்மை இட்டுச்செல்லுகிறது. எனவே கெட்ட வாசினையை விஷப்பாம்பிலும் கொடியதாக நாம எண்ண வேண்டும். உயிரைக் கொல்லும் விஷத்திலும ஆன்மாவைக் கொல்லும விஷம பயங்கரமானதல்லவா?

எனவே, நல்வாசினையால் ஏற்படும் நன்மைகளை நாம் எல்லவரும் நன்குணரவேண்டும். அவற்றை எடுத்துப் பிறருக்கும தருணம் கிடைக்கும போதெல்லாம நாம தெளிவாக விளக்கவேண்டும்.

கத்தோலிக்க மக்களைப்பொறுத்தமட்டில அனுதினமும் வேதாகமத்தின் ஒரு பகுதியை வாசித்தல சிறந்த நல்வாசினையாயமைகிறது. புனிதர்களின் வரலாறு வேதசாட்சிகளின் கதைகள், மரியன்னையின் வாழ்க்கைபோன்ற நூல்கள் வேதஅறிவை நம்மில் அதிகரித்துத தேவ அன்பை எம்மில மிளிரச் செய்து நாம் ஓர் உத்தம வாழ்க்கை இவ்வுலகில் வாழ உறுதுணை புரிகின்றன. எங்களில அநேகர் "கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" என்று திருவள்ளுவரால குறிப்பிடப்பட்டவாறு நல்ல சிறந்தநூல்கள் மலிந்து பொலிந்து விளங்கும் தற்காலததில் விசேஷமாக தீயநூல்களை வாசித்து எங்கள் ஞான அழிவைத் தேடிக்கொள்வது எவ்வளவு மூடத்தனம்?

கத்தோலிக்க பத்திரிகைகளை நாம் இறைவனின் தூதர்களாக வரவேற்று அவற்றை ஆதரிப்பது எமது அருங்கடனாயிருக்கின்றதே.

பி. சவரிமுத்து

வானொலி. திரைப்படம், தொலைக்காட்சி, அச்சு வெளியீடு — இவை யாவும் கடவுளின் கொடைகளே. ஆதலின் அவரின் மாட்சிக்காகவே நாம் பயன்படுத்த வேண்டும். நாம் செயலற்று இருப்பதால்தான் இக் கருவிகள் தீச்செயல்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, இக்கருவிகளின் பேராற்றலைக் கிறிஸ்தவர்களாகிய நாம் அறிந்திருத்தல் இன்றியமையாதது.

— மறைத்திரு எட்மன்ட் பெக்கர்.

## இறையியல் வல்லுனர் குழு

சென்ற வாரம் காவலன் வெளியிட்டபடி பரிசுத்த தந்தை அகிலம் முழுவதிலும் இருந்து தேர்ந்தெடுத்த இறையியல் வல்லுனரின் குழு ஒன்றை நியமித்திருக்கின்றார். இக்குழு கிறிஸ்தவத்தின் படிப்பினை முழுவதையும் ஆராய்ந்து கவனித்துவரும். இதிலே ஐவர் பிரான்சிலிருந்தும், நால்வர் ஜேர்மனியிலிருந்தும், மிகுதியானோர் மற்றும் தேசங்களிலிருந்தும் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

**பிரான்ஸ்:** லூயிஸ் போயர், ஈவ் கொங்கார், அன்திரேபியே மேரி யோசவ் டி கிலு, கென்றி டி லுபக்.

**ஜேர்மனி:** கால்ரூணர், யோசவ் றட்சிங்கர், றுடொல்வ், சினக்கன்பேக், கென்றி ஸ்கூமன்.

**இத்தாலி:** கார்லோ கொழும்பு, சிப்பிறியானோ வகஜீனி.

**அமெரிக்கா:** பர்ணபாஸ் அகேன், வால்ற்ரர் புகாட்.

**ஒல்லாந்து:** லெஸ்கு றேவற், அன்றேயா மல்ரா.

**போலாந்து:** ஸ்ரனிஸ்லாஸ் ஒயனீக்.

**யூகோசிலாவியா:** தொமிஸ்லா சகிபுனிக்,

**யப்பான்:** பீற்றர் நெமஸ்சேகி.

**கனடா:** பேனுட் லொனர்கன்

**அவுஸ்திரியா:** பிரான்சிஸ்கோ லக்னர்

**லெபனன்:** இஞ்ஞாசியோ காலிவ்

**சுவிற்சவாந்து:** யோண் வொண் பல்த்தசார், யோண் பைனர்.

**ஸ்பானியா:** ஒலிகாரியோ கொன்சாலெஸ்.

**ஆர்ஜென்ரீனு:** லூசியோ ஜெரா.

**பெல்ஜியம்:** பிலிப் டெலாகெ, ஜெராட் பிலிப்ஸ்.

**கொங்கோ:** தார்சியஸ் சிபாங்கு.

## உருளும் உலகிலே

● வார்சோ நகரிலே போலிஷ் டக்றர்மார்சிலர் சேர்ந்து கடுமையான ஈரலநோய் கண்டு சாதுந்தறுவாயிலிருந்த 40 வயதுடைய ஒரு மனிதனின் ஈரலைச் சத்திரவைத்திய மூலம் அகற்றிவிட்டு அதனிடமாக உயிருள்ள ஒரு மிருகத்தின் ஈரலை எடுத்துப் பொருத்தி வெற்றி கண்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இப்போது அவன நலல சுகத்துடன் காணப்படுகிறானென றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

● சம்பேதுருவானவரின் சிம்மாசனமானது 17-ம் நூற்றூண்டைச் சேர்ந்த ஜியோவான்னி பெர்னினி என்ற பிரபல சிற்பியால் வெணகலம் கொண்டு அலங்கார வேலைப்பாடுடையதாய்ச் செய்யப்பட்ட அழகிய பேழை ஒன்றில வைக்கப்பட்டு அவர் பேராலுள்ள வத்திக்கான் மாதேவாலயததிலுள்ள எட்டாத பலிபீடத்துக்கு மேலாக இருந்துவருகின்றது.

● சென்ற சித்திரை 22-ம் திகதியிலிருந்து பன்னிரு தினங்களுக்கிடையிலே ரூஷிய இராணுவத்தைச சேர்ந்த ஐந்து பிரதம ஜெனறல்கள் திடீர்திடீரென ஒருவர்பின் ஒருவராய் இறந்திருப்பதாக மஸ்கோவிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. இவர்களில் கடைசியாக மரணமடைந்தவர் 59 வயதுடைய மேஜர் - ஜெனறல் இகோர் அன்ரொனவ் எனபவராம்.

● லண்டன் நகரிலே செல்வி பரிமலா கெகிலி எனும் பெண்மணி 1965 ஆம ஆண்டு பயங்கர கார் விபத்துக்குள்ளாய்ப் படுகாயமடைந்து அங்கவீனமுற்றாள். சமீபத்திலே இவளுக்கு நஷ்ட பரிகாரமாக 22 000 பவுண கொடுக்கும்படி நீதிமன்றத்தில தீர்ப்பாயிற்று. இந்தப் பணத்தைப் பெற்றதும் அப்பெண்மணி முதல்வேலையாக லூர்துபதிக்கு யாத்திரை போகவேண்டுமென்று தான் நெடுநாள் கொண்டிருந்த பேராசையை நிறைவேற்றக் கூடியவளானாள்.

● இரண்டாவது உலக யுத்தகாலத்திலும், பொதுசன பாதுகாப்புக்கு உதவிசெய்ததிலும் காட்டிய சீர வீரத்துக்கும், தைரியத்திற்குமாகப் 18 நாய்களுக்கும, 1 பூனைக்கும், 3 குதிரைகளுக்கும், 32 மாடப் புறுக்களுக்கும் "விக்ரோறியா குரோஸ்" எனப்படும் வெற்றிச் சிலுவை விருதுகள் சன்மானிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் குண்டுவீச்சுக்குள்ளான கட்டடங்களிலிருந்து மக்களை மீட்க உதவிசெய்தும், சத்துரு படைகளின் அணிகளைத் தாண்டிச் செய்திகள் கொண்டு சென்றும் இருக்கின்றன.

## பிக்டனெலி அடிகளார் இலங்கை வருகிறார்

வைகாசிமாதம் 16ஆம் தேதி ரோமாபுரியிலிருந்து இலங்கைக்கு ஒரு பிரமுகர் வருகிறார். அவர் அதிவந் அதிமேற்றிராணியார் சேர்கியோ பிக்டனெலி அடிகளாரே. இவர் இப்போது மக்களுக்குப் போதனைசெய்யும் வத்திக்கான் காரியாலய பகுதியின் செயலாளர். 1967ஆம் ஆண்டு தொடக்கம் இப்பதவியிலிருந்து வருகிறார். இப்பதவியை ஏற்றதன்பின் உலகின் பலபாகங்களிலும் தமது காரியாலயவேலை எவ்வாறு நடைபெறுகிறதென நேரில்கண்டுவருமாறு பலஇடங்களுக்கும் சென்றுவருகிறார். கம்போடியாப் பிரதேசத்துக்குச் செல்லும் வழியில் இலங்கையில் நான்குநாள்கள் தங்கிச்செல்வார். இங்கு தங்கியிருக்கும் நாள்களில் கொழும்பில் தம்மைவந்து காணுமாறு அவ்வசதியுள்ள மேற்றிராணிமார், குருமார், துறவிகள் இல்லறத்தோர் யாவருக்கும் விண்ணப்பம் செய்திருக்கின்றார்.

## கலைக்கும் ஓர்விலை

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

மையிலே நல்நெஞ்சத்தையும் கரைத்திருக்கும். படங்களை விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்க்கவேண்டும்.

திரைப்படத்தில் நல்லதைப் போற்றி!—கெட்டதைத் தவிர்த்து—சமுதாயத்தைத் திருத்தக்கூடிய முன்னேற்றக்கூடிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது சமயக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட சமயப் பிரச்சாரம்செய்யும் படங்களை ஆதரிக்கவேண்டும்.

### ஒரு சொல்

உலகின் எத்திக்கிலும், நாட்டின் மூலையிலும், முடக்கிலும் வீட்டின் கூரையிலும் கோடியிலும் உமது நற்செய்தியைப் போதிக்கவேண்டும். என்று கிறிஸ்து பணித்தார். அவரது ஆணையை அமுல்செய்ய உதவும் கருவிகள் தான் நாடகம்—வானொலி—திரைப்படத் துறைகள். இத்துறைகளில் ஈடுபடுவோர், தங்களது பணி சாதாரணமானது அல்ல — அது இறைவனின் மீட்புப் பணியின் ஒரு சிறிய பகுதி என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். விஞ்ஞான முன்னேற்றத்தின் பலனாக வளர்ந்துள்ள இக் கருவிகள மூலம் இறைவார்த்தை நற்செய்தி—அருள் கூடிய அன்புச்செய்தி விதைக்கப்படுகிறது. விதை வளர்ந்து பலன் அளிக்கச்செய்பவர் கடவுள் தான் என்பது மறக்கலாகாது.

## வெளிவந்துவிட்டது

தினசரி பூசைவேளையில் உபயோகிப்பதற்கென
வெளிவந்துள்ள
திருத்திய புதிய பதிப்பு

**என்னுடையவும் உங்களுடையவும்**
**திருப்பலி**

தேவையானோர் கீழ்வரும் முகவரியில்
பெற்றுக்கொள்ளலாம்.

புனித சூசைமாமுனிவர் புத்தகசாலை,
பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

# "பரலோக பாதையின் யாத்திரிகன் பெயர் கிறீஸ்தவன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் மடியில் தலைவைத்திருந்தால் துயரம் தெரிவதில்லை

சிஸ்ரர் எம் பொனவெந்துரு,
திரு. கன். மடம். யாழ்ப்பாணம்.

அம்மா! அம்மா!! ... இவ் வார்த்தையிலேதான் என்ன இனிமை! என்ன கனிவு! என்ன பாசம்! இன்னுமொரு முறை அழைப்போம். "அம்மா!... இன்பம சொட்டுகிறது. கருணை களிநடம் புரிகின்றது. இது அன்பினில் அரும்பிய அமுத வார்த்தை. ஆம், அன்னையின் அன்பு — அதுதான் பண்பு நிறை அன்பு. தன்னலம் கருதாத் தாய்மையின் அன்பு. தியாகத்தின் சிகரத்தினில் சுடர்ஒளி வீசும் சிறந்த அன்பு. சேவைகலந்த சீரிய அன்பு. செல்வத்திலும் வறுமையிலும் சீர் குன்றாப் பேரன்பு. உதாசீனம் செய்யினும் உறுதியுடன் பின்செல்லும் உண்மை அன்பு நம் வாழ்வின் தொடக்கம முதல் இறுதிவரை நமமைக் கைவிடாமல் காத்திருக்கும் காருண்ணிய அன்பு. தாயினிடமேயன்றி இந்தஅன்பை நாம் எங்குமே காண முடியாது. அப்படிக் காண முடிந்தாலும் சற்றுச் சுயநலம் கலந்ததாகவே காணப்படும். இந்தத் தாயன்பின் மேன்மையை உணர்ந்ததனாலன்றோ அன்னையின் அன்பைச் சுகிக்கும் மானிடரில் சற்றுப் பொறுமை கொண்டு உருவிலா இறைவனே ஒரு கன்னியின் வயிற்றில் கருவாகி, அவளைத் தாயாக்கி அந்த அன்பைப் பெற்றுக்கொண்டான் என்கிறார் புனிதர் ஒருவர். அவ்வாறயின், தாயன்பின் மாட்சிதான் என்னே!

ஒரு மானிடனின் வாழ்வை எடுத்துக்கொள்வோமானால், அவனது ஜீவியம் பகலவனின் உதயம் முதல் மறைவு வரை முக்கிய பங்கெடுப்பவள் யார்? தாயன்றி வேறெவருமல்ல. பத்துமாதம் பத்தியம்காத்துப் பெற்றெடுக்கிறாள் குழந்தை



யை. அக்குழந்தை பின்பூரண வளர்ச்சி அத் தாயிலேதான் தங்கியுள்ளது என்று கூறலாம்.

தாயின் அன்பையிழந்துவாழும் எத்தனையோ குழந்தைகள் அதனால் மனோவளர்ச்சியிலும, உடலவளர்ச்சியிலும் எவ்வளவோ பாதிக்கப்படுவதை நாம் அனுபவவாயிலாக அறியலாம். குழந்தை வளர்ந்து பேசத் தொடங்கும்பொழுது, தன் மழலைமொழியில் முதற் கூறும் வார்த்தை 'அம்மா'. இதனாலன்றோ கவிஞனும், 'அம்மா' என்பது தமிழ் வார்த்தை — அதுதான் குழந்தையின் முதல் வார்த்தை என்று பாடியிருக்கின்றான்.

அக் குழந்தை வளர்கிறது. அன்னை இடம்பெறவேண்டிய அதன் இதயத்தில் வேறு பலரும் இடம்பெற நேரிடுகிறது. ஒருவேளை தந்தையாயிருக்கலாம்; சகோதர சகோதரியாயிருக்கலாம்; காதலன் காதலியாயிருக்கலாம்; உற்ற நண்பர்களாயிருக்கலாம. எனினும், அன்னையின் அன்பை எவ்வணும் ஈடு செய்ய முடியாது. அந்த அன்புக்கு எந்தஅன்பும் இணையாகமாட்டா. இறைவனே இறைவாக்கினர் மூலமாகத் தம்அன்பை ஒரு தாயின் அன்புக்கு உருவகப்படுத்திக் கூறியிருக்கின்றார் ஒரு தாய் தன் மகவைச் சீராட்டுவது போல், நான் உங்களை அரவணைத்துக்கொள்வேன்" என்கிறார், இறைவாக்கினர் இசையாஸ். "அன்னைபோல அருள் மிகுத்து மன்னு ஞான வரதனே!" என்று போற்றிப் புகழ்கின்றார் தாயுமான அடிகள். எனவே, தாயின் அன்பைவிட மேலான அன்பை இறைவனே தவிர வேறெவரும் கொண்டிருக்க முடியாது.

இவ்வுலக வாழ்க்கைக்காக எமக்கு இறைவனால் அருளப்பட்ட ஒரு தாயின் அன்பு இதுவானால், எமது பாலோக அன்னையின் அன்பைப்பற்றி எடுத்தியம்பவும் வேணடுமா? யார் அந்த அன்னை? அவள் தான் கல்வாரிக் குன்றிலே — கழுமரத்தடியிலே கருணைவள்ளல் கிறீஸ்துவால் கையளிக்கப்பட்ட கடவுளின் தாய்.

"ஸ்திரியே! இதோ உன் மகன்"; "அருள்! இதோ உன் தாய்". ஆம், அந்நிமிடமே கடவுளின் தாய் மாந்தரின் தாயானாள். இறைவனின் இரட்சணியத் திட்டத்தில பெரும்பங்கை ஏற்றுக்கொணடாள். தாய் என்ற பட்டத்துடன் உடன் இரட்சகியுமானாள். உலகம் அவளை 'அம்மா!' என்றழைக்கும் உரிமை பெற்றது. அவளும் அவ்வுலகினை அரவணைக்காமல் இருக்க முடியாது.

கொந்தளிக்கும் கடலிலே கரை காணாது தத்தளிக்கும நாவாய்களுக்கு வழி காட்ட இருக்கிறது விட்டுவிட்டு ஒளிகாலும் கலங்கரை விளக்கு. பலவகை இன்னல்களும், சோதனைச் சூறாவளிகளும் எம்மை வளைந்து நம்பிக்கையே யற்றுப்போகச் செய்யக்கூடிய நிலையில் எம்மை வைத்தாலும், எம்மைக் கைவிடாது காப்பாற்ற நிற்கின்றாள் கன்னித் தாய். ஏனென்றால், அவள் உலகை வென்ற உத்தமி; அலகையை ஒடுக்கிய ஆண்டவள்; விண்ணுக்கும் மணணுக்கும் அரசி. எனவே, நாம அஞ்ச வேண்டிய அவசியமே இல்லை.

மனிதன் மனிதனாக வாழுமட்டும்போராட்டம் இருந்தே தீரும் நான் என்ற ஆணவமோ உயிர் பிரிந்தாலும் சற்றுப் பொறுத்தே நம சரீரத்தைவிட்டகலும். பசாசோ கர்ச்சிக்கும் சிங்கம்போல எந்நேரமும விழிப்பாகவே யிருக்கின்றது. இந்த உலகமோ தன் தீய லீலைகளைப் புரிந்துகொண்டு, நாச வலை வீசி மோசம் செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. எனவே, போராட்டம்தான் எம் ஒரே முடிவு. இப் போராட்டத்தில பின்னிடுவதா? நம்பிக்கை இழப்பதா? பல மற்று வீழ்வதா? அதுதான் இல்லை.

மனிதமனமே! கலங்காதே. அன்னையிருக்கிறாள் உன்னை அரவணைத்துக்கொள்ள. அம்மா இருக்கிறாள் உனக்கு ஆறுதல் மொழி கூற. அவள் மடியில் இளைப்பாறு. அமைதியைக் காண்பாய். உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த இவ்வுலக அன்னை காலறதின் கோலத்தில் ஒருவேளை உன்னை மறந்துவிடலாம். வளர்த்தெடுத்த தந்தை வறுமையின் வெறுமையால் வயிற்றுப் பிழைப்பை நாடி ஓடிவிடலாம். உடன்பிறந்த சகோதரன் சகோதரி தம் குடும்பமும் தாமும் என்று உன்னைக் கைநெகிழலாம். இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றித்து வாழ விருப்புவதாக வாக்களித்த உன் கணவன் உன்



னைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கலாம. அன்றேல், உளத்தாலும் உடலாலும ஒன்றுபட்ட உன் மனைவியின் அன்பு மாறிவிடலாம. உன் வாழ்வுக்கு வளம செய்யவல்ல ஒரே ஜீவன் என்று நீ இதயத்தில் போற்றிவந்த உன் காதலன் உன்னைக் கைவிட்டுவிடலாம். அன்றேல், உன் இன்பமே தன் இன்பம் என்று வாழ்ந்த உன் காதலியின் அன்பு திசை மாற்றப்படலாம். ஓருயிர் ஈருடலாய் வாழ்ந்த உற்ற நண்பன் உன்னைக் கைவிடலாம். நீ உன் உயிர்போல் அன்பு செய்த ஒருவரை மாணம் உன்னிடமிருந்து பிரித்துவிடலாம். எவருமேயின்றித் தஞ்சமற்றுத் தவிக்கும அவலநிலை ஏற்படலாம். அந் நேரங்களில் ஏழை மனமே! கலங்காதே. அன்னையைநோக்கித திரும்பு. உன் துயரத்தை அவளிடம் எடுத்துச் சொல். ஒரு தாய் தன் மகவை விளங்கிக்கொள்ள நேரமெடுக்காது. அவள் மடியில் நீ இளைப்பாறுவதை உணர்வாய்.

திருமுழுக்கின்போது அணிந்த தூய ஆடையை நீ களங்கப்படுத்தி யிருக்கலாம்; கறையாக்கியிருக்கலாம். இன்னும் சிலவேளை அக் கறைகளுடனேயே இருக்கலாம். அஞ்சாதே! அன்னையை நாடிச் செல். அவள் மடியில் உன தலையை வைத்து நிலையைக் கூறு. உன்னைக் கைவிடமாட்டாள். தன் அருள் மடையைத் திறந்துவிடுவாள். வரங்களை வாரி வழங்குவாள். உன் அருள் வாழ்வைக் காத்திடுவாள். சோதனை நேரங்களில் அருகிலே நிற்பாள். துன்பமாகிய புயலை நீ தாங்கிக் கொள்ளத் தைரியம் அருளுவாள். சாவின் நேரமும் உன் அருகில் நின்று தேவனின் நாட்டிலே உன்னைக் கொண்டு சேர்ப்பாள். இது உறுதி.

எனவே, எம் இன்னல் இடுக்கண் வேளைகளில் அன்னையை நாடிச் செல்வோம். 'அம்மா' என்றழைத்து எம் துயரைத் துடைக்க வேண்டுவோம்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## வாசமலர் சூடி வாழ்த்திடுவாய் நன்னெஞ்சே!

பெற்றெடுத்த தாயும் பேசிடுவாள் ஏசிடுவாள்
பிறக்காது நீயிருந்தால் பேர்நன்மை என்றுரைப்பாள்
கற்றுவிட்ட கல்வியும் கரைகாட்ட வில்லையென்பாள்
பற்றற்றுப் பாசமற்றுப் பாரினிலே வாழ்ந்திட்டேன்
— ஓர்நாள்
நற்பிள்ளை நீதானே நானிருக்கப் பயமெதற்கு
நம்மண்டை வந்திடுவாய் நற்பாதை காட்டிடுவேன்
கற்கண்டுக் குணமுனக்குக் காலம்தான் மாற்றியது
கவலைகளை விட்டுவிட்டு கணப்பொழுதில் ஓடிவா—என்று

* * *

காற்றில் கலந்துவந்த கற்கண்டு ஓசையால்
கணப்பொழுதும் தரியாமல் கால்கடுக்க ஓடினேன்
பாற்கடலின் முத்தோ பவளமோ வெண்திரையோ
நாற்புறம் வீசும்ஒளி நானிலமும் பரவிடவே
காற்பாதம் பிடித்துக் கதறிநான் வீழ்ந்துவிட
கருணைமழை பொழிந்திட்ட கன்னிமரித் தாயாரின்
மாற்று மருந்தை மக்காள்நீர் காண்மின்கள்
மறுவார்த்தை தேவையில்லை மாமரியே தாயாவாள்.

* * *

நாசஉலகில் நானுமோர் ஏழை அம்மா
நீசப்பாவியாய் நின்னண்டை ஓடி வந்தேன்
தாசனாய் உன்னண்டை தமியனாய் வந்தவனை
காதலால் ஆதரித்துக் கருணை காட்டுகிறாய்,
நாகத்தின் தலைநசுக்கி நமக்கருள் புரியும்,
பாவத்தின் மாசற்ற பரலோக இராக்கினியை!
பாசத்தின் இருப்பிடமாய்ப் பாவியற்கு அருள்பவளை
வாசமலர் சூடி வாழ்த்திடுவாய் நன்னெஞ்சே.

— A. W. அரியநாயகம்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 8968**

1. மரியார் சூசைப்பிள்ளையும், அவரின் மனைவி
2. அந்தோனியாப்பிள்ளையும், இருவரும் கரையூர், யாழ்ப்பாணம்.

— வழக்காளிகள்.

எதிராக

1. சவிரி ஞானப்பிரகாசம், அவர் மனைவி
2. மரிய, இருவரும் மவுண்காமல் ரேட், யாழ்ப்பாணம்.

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 8968-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1969-ம்ஆண்டு ஆனிமீ 15-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 6,875உம், 31-3-67 தொடக்கம் 2-4-68வரைக்கும் ரூபாய் 5,000-க்குப் 12வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும், கோட்டுச்செலவு 228ரூபாய் 75சதமும். அதாவது ரூபா 106-42 + ரூபா 64-50 + ரூபா 57-85.

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர்இறை, செய்பயிர் வான்பயிரும், கிணறும், குசினியும், கடை கட்டிடமும், கல்வீடும். காணியின் பெயர் "அரியதுறையன் தறை" நிலப்பரப்பு 1¾.

எல்லை: கிழக்கு — சுவாம்பிள்ளை சவிரிமுத்துவும், மனைவி சிசிலியாவினதும் ஆதனம். வடக்கு — சவிரிமுத்து மனவலும், மனைவி தங்கம்மாவினதும் ஆதனம். மேற்கு — ரேட். தெற்கு— காணிக்கைமரிய மனைவி யோசேப்பினதும், பங்காளரினதும் ஆதனம்.

எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

107, பெரியதெரு, யாழ்ப்பாணம்,
24-4-1969.

49-69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் இராஜபாதை

## அல்லது

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

## என்றழைக்கப்படும்

# இல்லறத் துறவறம்

(சென்றவாரத்தொடர்ச்சி)

7. இச் சபைக்குண்டான சலாக்கியங்களும் பலன்களு மெவை? உலகத்திலுள்ள வேறெந்தச் சபைக்குமில்லாத அநேக சிலாக்கியங்கள் இதற்குண்டு. அவையாவன:

(a) பாப்பரசர்கள் தாம் தாமே இச்சபையிற் சேர்ந்து அதை மகிமைப்படுத்தியது போதாதென்று வருடாவருடம் 175 பரிபூரண பலன்களைப் பொதுப்பாவமன்னிப்புமூலமாகவும், தமதுவிசேஷ ஆசீர்வாதங்கள் மூலமாகவும் வேறு விதமாகவும் அதன் அங்கத்தவர்களுக்கு அருளி வருகிறதுமன்றி, கணக்கில்லாத அபூரண பலன்களையும் வழங்கியுள்ளனர்.

(b) அர்ச். பிரான்சிஸ்குவின் முதலாம் சபையாராலும், இரண்டாம் சபையாராலும் செய்யப்பட்டு வரும் சகல செபதபங்கள், நற்கிருத்தியங்கள், பூசைகள் எல்லாவற்றிலும் சீவந்தராயிருக்கும்போதும், மரித்தபிற்பாடும் இதன் அங்கத்தவருக்குப் பங்குண்டு.

(c) இச்சபையிற்சேர்ந்து பிரமாணிக்கமாய் நடந்து மரிப்பவர்கள் ஒருபோதும் நரகத்திற்குப் போகார்கள் என்று நமதாண்டவர் அர்ச். பிரான்சிஸ்குவுக்குவாக்குறுதி கொடுத்திருக்கிருர்.

(d) அர்ச். பிரான்சிஸ்குவுக்குத் தாம்மரித்த தினத்தன்று (ஐப்பசி 4) உத்தரிப்புஸ்தலத்தில் இறங்கித் தமது சபையாரின் ஆன்மாக்களை மீட்டு மோட்சகரை சேர்க்க ஆண்டவர் அவருக்கு விசேஷ உரிமையை வழங்கியிருக்கிருர். ஆதலால் பிரான்சிஸ்கன் சபையார் எவரும் ஒரு வருடத்துக்குமேல் உத்தரிப்புஸ்தலத்தில் இருக்கமாட்டார்கள் என்பது வெளிப்படை.

8. அர்ச். பிரான்சிஸ்குவின் மூன்றுஞ்சபை ஒரு பக்திச் சபையென்று சிலர் சொல்லுகிருர்களே, இதில் உண்மையேதும் உண்டா? இல்லை, ஒருபோதும் இல்லை. இச் சபையைப் பற்றிச் சரியாய் அறியாதவர்கள் பிழையான விளக்கத்தினுல் அப்படிச் சொல்வதும் உண்டு. இது அவர்களுடைய அறியாமையைத்தான் நிரூபிக்கின்றது. இது ஒரு பத்திச் சபையல்ல. இது உண்மையாகவே உலகவாசிகளுக்குரிய ஒருசந்நியாச சபையென்று அழுத்தந் திருத்தமாய்ப் பாப்புமார் தமது நிருபங்களில் கூறியுள்ளார்கள். பின்சொல்லப்படும் நிருபங்களை ஆராய்ந்து பார்க்கவும்.

13-ம் சிங்கராயர்: "மிசெரிக்கோர்ஸ் டேயிவீ (f)லியும் "ஓஸ்விக்காற்ருே"

10-ம் பத்திநாதர்: "ரேசியும் பிரான்சிஸ் காலியும்"

15-ம் ஆசீர்வாதப்பர்: "சக்கிரு புருெப் பேடியும்."

11-ம் பத்திநாதர்: "றீத்தே எக்ஸ் பியாற்றிஸ்."

9. உலகெங்கணும் இம் மூன்றுஞ்சபையில் எத்தனை பேர் அங்கத்தவராய் இருக்கிருர்கள்? அறுபது இலட்சத்துக்குமேல் இருக்கிருர்கள். 2-ம் வத்திக்கான் சங்கத்தின் பின் உலகம் முழுதும் விசேஷமாய்ப் பிறசமயத்தவர்கள் அர்ச். பிரான்சிஸ்குவின்போக்கை அதிசயத்தோடு அவதானித்து அவர்மேல் விசேஷ அன்பும் ஆர்வமும் கொண்டிருப்பது மாத்திரமல்ல, அவரால் ஸ்தாபிக்கப்பட்ட மூன்று சபைகளையும், விசேஷமாய் மூன்றுஞ்சபையை ஆதரிக்கவும் முன்வந்துள்ளார்கள். ஆகையினுல் அவர் ஏற்படுத்திய உலக வாசிகளுக்குரிய மூன்றுஞ் சபையில் சேரக் கணக்கிலலாதவர்கள்முற்படுவார்கள் போற் தோன்றுகிறது.

10. இச்சபையிற் சேர விரும்புபவர்களிடத்தில் எதிர்பார்க்கப்படும் குணுதிசயங்களெவை?

(a) உரோமான் திருச்சபைக்கும், அர்ச். பாப்பானவருக்கும், அவரால் முறையாய் நியமிக்கப்பட்ட மேற்றிராணிமாருக்கும் பிரத்தியட்சக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

(b) நன்னடத்தையும், சாந்தகுணமும், கத்தோலிக்க வேத அனுஷ்டானங்களில் பிரமாணிக்கமுடையோராயும் இருக்கவேண்டும்.

(c) ஞானத்திட்சை பெற்றுப் புதுநன்மைவாங்கி உறுதிப்பூசுதல் பெற்றவராய் இருக்கவேண்டும்.

(d) பதினுன்கு வயதுக்கு மேற்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

(e) விவாகமான ஸ்திரீகள் தங்கள் கணவர்மாருக்கு எல்லா விஷயங்களிலும் பணிந்து நடக்கிருர்கள் என்றுகாட்டுவதற்கு அவர்களுடைய சம்மதம் பெற்றவர்களாய் இருக்க வேண்டும்.

(f) சற்றும் சமுசயத்திற்கு இடம்தராத நடத்தையுடையோராய் இருக்கவேண்டும்.

(g) சருவேசுரனுடைய கற்பனைகளை அனுசரிக்கவும், திருச்சபைக்குக் கீழ்ப்படியவும், தவறினுல் அதற்குரிய பரிகாரம் செய்யவும் ஆயத்தமாய் இருக்கவேண்டும்.

(h) சபைத்தரிசகர், சபைக் கர்த்தர், சபைத் தலைவரால் கொடுக்கப்படும் கட்டளைகளுக்கும், சபைஒழுங்குகளுக்கும் எப்போதும் அமையத் தயாராயிருக்க வேண்டும்.

(i) பிறரில் சருவேசுரனைக் கண்டு அவர்களை நேசித்து அவர்களுக்குச்சேவைசெய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும்.

11. எப்பேர்க்கொத்தவர்கள் இச்சபையிற் சேரத் தகுதியற்றவர்களாய் இருக்கிருர்கள்?

(a) குடிவெறிப் பழக்கமுள்ளவர்கள்.

(b) நேர்மையில்லாத சீவியம் சீவிப்பவர்கள்.



(c) மரியாதையற்ற உடையணிந்து மற்றவர்களுக்குத் துர்மாதிரிகையாயும், பாவத்துக்கு இடமாயுமிருப்பவர்கள்.

(d) முன்பின் யோசனையின்றி சாவதானமற்ற விதமாய்க் கடன்பட்டு அதினின்று மீளும்வகை யில்லாதவர்கள்.

(e) தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு முற்றும் பிறருடைய உதவியையே நாடியிருப்பவர்கள்.

(f) நிலைமையான உறைவிடமில்லாதவர்கள்.

(g) தகாத சீவியம் சீவிப்பவர்கள்

(h) எப்போதும் பிறர்குற்றம் காணுங் குணமுடையோர்.

(i) நிலைவரமான புத்தியின்றிக் கணத்துக்கொரு நினைவு செய்வோர்.

(j) யாதொருகாரியத்தைப் பற்றித் திடமான தீர்மானங் கொள்ள இயலாத தன்மையுடையோர்.

(k) ஆவலாதி, அவதூறு கோள்குண்டனி பேசுவோர்.

(l) ஒற்றுமையைக் கெடுத்து வேற்றுமை விளைவிக்கும் விபரீதகுணம் படைத்தோர்.

(m) பிறர்நேசம், சகோதர அன்பு அற்றோர்.

(n) முற்றுமே லௌகீக சார்புடையோர்.

(o) பேராசை பிடித்தோர்.

(p) பொருமைக்காரர்.

(q) கெட்டபேச்சுப் பேசுவோர்.

(r) கலகப்பிரியர்.

12. இச்சபையிற் சேர என்ன செய்யவேண்டும்? இச்சபையின் அதிகாரிகளிடத்தில் விண்ணப்பப் பத்திரம் ஒன்றுபெற்று அதை நிரப்பித் தன்னை நன்கறிந்த ஒரு குருவானவரிடம் கையொப்பம் பெற்றுச் சபைக் காரியாலயத்துக்கு அனுப்ப வேண்டும். ஆலோசனைச் சங்கத்தாரின் அங்கிகாரத்தின் பின் இவர் ஏற்றுக்கொள்ளப் படுவர். நாலுமாத பரிசோதனையின்பின் நவசந்நியாசத்துக்குச் சேர்த்துக்கொள்ளப் படுவர்.

இச்சபையானது நமது இலங்கையில் கொழும்பு, நீர்கொழும்பு, மகோஞ, மாத்தளை, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் பரம்பிக்கொண்டு வருகிறது. நமது யாழ்ப்பாணத்தில் காலஞ்சென்ற வண. குருசோவிறதர் அவர்கள் 1935ஆம் ஆண்டு ஆரம்பித்த இச்சபையில் தற்போது 250பேருக்கு மேற்பட்டோர் சேர்ந்திருக்கிருர்கள். ஊர்காவற்றுறையிலும் இளவாலையிலும் இதன் கிளைகள் உண்டு. இதன் முழுவிபரம் அறிய விரும்புவோர் கீழே சொல்லப்படும் பேர்வழிகாரரில் ஒருவரோடு எழுத்துமூலமாகவோ அல்லது நேர்முகமாகவோ தொடர்பு கொள்ளவும்.

1. Rev. Fr. Director,
   3rd. Grd. of St. Francis,
   Bishop's House, Jaffna.
2. A. P. Muttiah Esq.,
   (President V. O. F)
   Catechist,
   St. Mary's Cathedral,
   Jaffna.
3. A. S. Francis of Mary Esq.,
   (Novice Master)
   60/9, Nazareth House,
   Solomon Lane,
   Old Park Road (South),
   Jaffna.

"எனக்கு அறிமுகமானவர்கள், என்னை அன்போடு நேசித்தவர்கள் அனைவரதும் செபங்கள் இத்தருணம் எனக்குத் தேவை"

— புனித எப்ரேம்

## நினைவு கூருவோம்

### அன்னை செசீலியா நல்லம்மா சாமுவேலின் பதினுன்காண்டு அமரதினநினைவு 20-5-69.

என்றும் எமக்கினிய அம்மா!... இறைவன் பதம்வாழும் அம்மா!...
எம்மை இங்குத் தவிக்கவிட்டு சென்றுவிட்டாய் ஏனம்மா?...
இன்றுடனே ஈரேழு ஆண்டுகளும் கழிந்ததம்மா!
இன்னமுமே எம்கண்ணீர் ஓய்ந்ததில்லை பாரம்மா!...
இன்பமுடன் ஓர் துணையாய் இருந்த எங்கள் அன்புநிறை
தந்தையையும் உன்னருகே அழைத்து விட்டாய் ஏனம்மா?...
துன்பகீதம் முடியவில்லை!... துயர் நெஞ்சில் மறையவில்லை!
தூயவனின் கருணையையுன் மைந்தருக்காய் கேளம்மா!...

அன்னை செசீலியாவின் ஆன்மா சாந்தியடைய வேண்டுதல்களைக் காவலன் நேயர்களிடம் இரந்து நிற்கும்: மக்கள், மருகர், பேரர்.

"ஜசிந்தா லொட்ஜ்", பண்டத்தரிப்பு.

* * *

### திரு. சவரிமுத்து அவர்கள் அமரத்துவம் அடைந்த 8-வது வருட ஞாபகம்

பிறப்பு: 29-9-1903. இறப்பு: 21-5-1961.

சுவாமி மரித்த சகல விசுவாசிகளின் ஆத்துமங்களையும் பாவத்தளைகளில்நின்று விடுதலையாக்கும் உமது கிருபையின் உதவியினுல் அவர்கள் உமது தீர்ப்புகளின் பழிவாங்குதலைத் தவிர்த்துக்கொண்டு —நித்திய பிரகாசத்தின் பேரின்பத்தை அனுபவிப்பார்களாக.

நித்திய இளைப்பாற்றியை இவருக்குக் கொடுத்தருளும். ஆண்டவரே முடிவில்லாத பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது. (64-ம் சங். 2 : 3). கர்த்தாவே, சீயோனில் உம்மைக் குறித்துக் கீர்த்தனம் புரிவதும், யெருசலேமில் உமக்குப் பொருத்தனை செலுத்துவதும் தகுதியாகின்றது. சுவாமி என் மன்ருட்டைக் கேட்டருளும். மாமிசமான சகலரும் உமதண்டை வருவார்கள். நித்திய இளைப்பாற்றியை இவருக்குக் கொடுத்தருளும்.

இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காகக் கொட்டாஞ்சேனை, சந்தலூசியா ஆலயத்திலும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயத்திலும், கிளிநொச்சி பரி. பாத்திமா, ஆலயத்திலும், குருநகர் பரி. புதுமைமாதா ஆலயத்திலும், நாயக்க கந்தை நல்லாயன் கன்னியர் மடத்திலும் 21-5-69 புதன்கிழமை திருப்பலிப் பூசைகள் ஒப்புக்கொடுக்கபடும். இத்திருப்பலிகளில் பங்குபற்றுவோர் அன்னுரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக இப்பலிகளை ஒப்புக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிருேம்.

இவரின் பிரிவால் துயருறும்: மனைவி, அற்புதமும், மூத்த சகோதரன்: சவரிமுத்து வஸ்தியாம்பிள்ளையும்.

89, சென் பெனடிக்ற் மாவத்த, கொட்டாஞ்சேனை.

50/69.

* * *

### சில்லாலை ஆசிரியை ரேசமுத்து விருஸ்பிள்ளை அவர்களின் 4-வது வருட மரண ஞாபகம் 15-5-69.

அன்னுரின் ஆன்ம சாந்திக்காக நிகழும் 15-5-69 வியாழக் கிழமை காலை 6-15 மணிக்கு சில்லாலை ஆரோக்கியநாயகி ஆலயத்தில் திவ்விய பாடற்பூசை நிறைவேற்றப்படும். இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகள், சங். கன்னியாஸ்திரிமார், மரியாயின் சேனையார், அன்பர்கள் சுற்றத்தவர்கள் யாவரும் இவவது ஆன்ம சாந்திக்காக வேண்டிக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இரக்கமுள்ள யேசுவே! மரித்த உமது அடியாளாகிய ரேசமுத்துவிற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும்.

51/69.

## மாதகல்

சென் தோமஸ் சன சமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

போஷகர்: வண. பிதா எல். யோசெவ், ஓ. எம். ஐ.; தலைவர்: திரு. அ. லூயிஸ்; உபதலைவர்: திரு. ஆ. அன்ரனி பெர்னுண்டோ; காரியதரிசி: திரு. நீ. ரேச் மரியதாஸ்; உபகாரியதரிசி: திரு. கி. ம. நீற்றர்; தனதிகாரி: திரு. அ. யோசெவ். — நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**வைகாசி — 1969**

| | | | |
|---|---|---|---|
| 18 | ஞாயிறு | விண்ணேற்ற விழா. பின். ஞா | [வெ] |
| 19 | திங்கள் | புனித செலஸ்தீன் இராயப்பர் | [வெ] |
| 20 | செவ்வாய் | புனித சியென்னு பெர்னார்தீன | [வெ] |
| 21 | புதன் | கிழமைப் பூசை | [வெ] |
| 22 | வியாழன் | ,, | [வெ] |
| 23 | வெள்ளி | ,, | [வெ] |
| 24 | சனி | பரி. ஆவி விழா. திருவிழிப்பு | [சி] |

# காவலன் கருத்து

## அறிவைப் பெருக்குக

மனிதன் முன்னேற்றம், சுதந்திரம் என்னும் பெயரில் ஓர் அடிமைத்தனத்திலிருந்து மற்றோர் அடிமைத்தனத்துள் புகுகின்றான் என சோர்வு மனப்பான்மையுள்ளவர் அடிக்கடி கூறுவதை நாம் லட்சியம் செய்யாவிட்டாலும் அதிலும் ஓர் உண்மை அடங்கியிருக்கிறதென்றே கூறலாம். அச்சுவாகனம் கண்டுபிடிக்கப்பட்டு நூல்களும், பத்திரிகைகளும் லட்சக்கணக்கில் வெளிவர ஆரம்பித்தபோது, அஞ்ஞான இருளிலிருந்து உலகு விடுபட்டது, அநீதிகளுக்கெல்லாம் சாவுமணி அடிக்கப்பட்டதென மக்கள் மகிழ ஏதுவாயிற்று, ஆனால் மனிதன் எதைத்தான் தீமைக்குப் பயன்படுத்தாமல் விட்டான்? நல்லறிவுச்சுடர் கொளுத்த ஏற்பட்ட அச்சுவாகனம் பலவித துஷ்ப்பிரயோகங்களுக்கு ஆளாயிற்று. நயத்தைக்கருதியே நடத்தப்படும் பத்திரிகைகள் பிரசாரக் கருவிகளாகின்றன. மூலையில் நடந்த தவறுகளையெல்லாம் சந்திக்குக் கொண்டுவந்து கவர்ச்சிகரமாக அம்பலப்படுத்துகின்றன. வேறுபல பிரசுர கர்த்தாக்கள் மனிதனுடைய கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கு உணவூட்டி பணம் தேடுவதைத்தான் லட்சியமாகக் கருதுகின்றனர்.

ஏனைய சமூகத்தொடர்புச் சாதனங்களும் இவ்வித துஷ்ப்பிரயோகங்களுக்கு ஆளாயிருக்கின்றன. முக்கியமாகத் திரைப்படம், நல்லோர்கள் திரைப்படம் பார்ப்பதே தவறென்று சொல்லுமளவிற்கு வந்துவிட்டது. ஆனால் அடிப்படையில் அது கலையையும், அறிவையும் வளர்க்கும் ஒரு கருவி.

சமூகத்தொடர்புச் சாதனங்கள் மக்கள்மீது எவ்வளவு செல்வாக்குச் செலுத்திவருகின்றன என்பது யாவருமறிந்ததே. பத்திரிகைகளும் திரைப்படங்களும் மக்கள் வாழ்வையே உருவாக்குகின்றன என்று சொல்லலாம். இச்சாதனங்கள் நன்மைக்குமட்டும் பயன்படுவதாயிருந்தால் அவற்றின் செல்வாக்கைப்பிட்டு, யாரும் கவலைப்படவேண்டியதில்லை. மக்களுக்கு அறிவும் இன்பமும் அளித்து அவர்களைச் சன்மார்க்க வழியில் இட்டுச்செல்லவேண்டிய சாதனங்களை இயக்குபவர்கள் தமது கடமையை அலட்சியம் செய்தால் அல்லது தவறான வழியில் சென்றால் அதனால் விளையும் தீங்கு மிகப்பெரிதாயிருக்கும்.

நிலைமை இவ்வாறிருக்கையில், மக்கள் கடமையாது? எந்தத்தொழிலும் அதை ஆதரிப்பவர்களாலேயே வளர்கிறது. நன்மையானவற்றை ஆதரித்து தீயனவற்றைப் பகிஷ்கரிப்பதால் தீமை அழிவதற்கு வழியேற்படுகிறது. இதில் கிறிஸ்தவர் பிறருக்கு வழிகாட்டிகளாய் விளங்குதல் வேண்டும். தயங்காது தம் கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிடல்வேண்டும்,

இலௌகிக அறிவை வளர்க்கும் நூல்களை மட்டுமல்லாது, கிறிஸ்தவ இலக்கியங்களையும், ஞான அறிவை வளர்க்கும் நூல்களையும் வாசித்துணர்வதன் அவசியத்தை மறக்கலாகாது. முக்கியமாக இறைவனின் நூலாகிய வேதாகமம் கிறிஸ்தவர் வாழ்வில் வகிக்க வேண்டிய இடத்தை அறிவோம். கத்தோலிக்க பத்திரிகைகளுக்குச் சந்தா செலுத்தினால்மட்டும் போதாது. அவை வாசிக்கப்படவேண்டும். பிறநூல்களோடு ஒப்பிடும்போது ஆன்மீகநூல்கள் கவர்ச்சிகரமாயில்லாதிருக்கலாம். அவற்றோடு போட்டியிடக்கூடிய அளவு பொருளாதாரநிலையோ வேறுவசதிகளோ அவற்றுக்கு இல்லை. எனவே பிறசஞ்சிகைகளோடு ஒப்பிட்டு நோக்கி கத்தோலிக்க பிரசுரங்களைக் குறைகூறுவது நியாயமாகாது. ஆனால் கத்தோலிக்க எழுத்தாளர் முன்வந்து இப்பிரசுரங்கள் மேல்நிலைக்கு வருவதற்கு உதவுதல்வேண்டும். அதுமட்டுமல்லாது கிறிஸ்தவ கோட்பாடுகளை, ஒழுக்கநெறிகளை மையமாகக்கொண்டபடைப்புகளைப் பிற பிரசுரங்களிலும் வெளியிட்டால் பிறமதத்தினரும் அவற்றைப் படித்தறியக் கூடும். அது சிறந்த அப்போஸ்தலிக்க சேவையாகவுமிருக்கும்.

# நல் வாசினை ஞாயிறு

கத்தோலிக்க திருச்சபையானது வருடத்தில் வரும் ஒரு ஞாயிறை 'நல்வாசினை ஞாயிறு'' என்று அழைக்கிறது. அத்தினத்தில்—சில வேளை அவ்வாரம் முழுவதிலும் நல்வாசினையின் அவசியத்தைப்பற்றியும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளைப் பற்றியும் எடுத்து நன்கு விளக்குகிறது. சிற்சில பங்குகளில் அந்நாளில் சிறந்த நூல்களை மக்களின் இல்லங்களுக்குக் கொண்டுபோய் விசுவாசிகள் அவற்றை வாங்கி வாசித்துப் பயனடைய உதவி செய்கிறது. ''நல்வாசினை'' என்று நாம் ஈண்டு குறிப்பிடுவது சமய—சன்மார்க்க நூல்களை வாசிப்பதையே.

மக்கள் அறிவைப்பலவித வழிகளில் பெற்றுக்கொள்ளுகிறார்கள் நாடகம், நடனம் போன்ற நிகழ்ச்சிகளை நேரடியாகக் கண்டு அறிவைப்பெற முடியும். பேச்சு, பாட்டு, வானொலி நிகழ்ச்சிகள் போன்றனவற்றைக் காதாற்கேட்டு மக்கள் அறிவைப் பெறுகின்றனர். ஆனால், வாசித்து விளங்கும் திறனமைந்த மக்கள் பெரும்பாலும் நூல்களை வாசித்தல் மூலமே தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்கின்றனர், இவற்றின் நிமித்தமே தற்காலத்தில் ''சமூகத் தொடர்புக்கருவிகளை''த்திருச்சபை, அரசாங்கம் போன்ற பலஸ்தாபனங்கள் தங்கள் அங்கத்தவர்களுக்கு அறிவைப் புகட்டும் அருஞ்சாதனங்களாக உபயோகித்து வருகின்றன. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளில் ''சமூகத்தொடர்புக்கருவிகள்'' ஒருமுக்கிய இடம் பெற்றமையும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

எவ்வாறு ஒரு மலரின்திறமை அதன் வாசனையால் அறியப்படுகிறதோ அதுபோலவே ஒருவனின் அறிவு உணர்ச்சித்திறன் ஆகியவை அவன் வாசிக்கும் நூல்களின் தரத்தால மட்டிடப்படும். இதனாலன்றோ ''தான் கற்றநூலளவே ஆகுமாம் நுண்ணறிவு'' என்று எமது பழைய பாடல்களும் இவ்வுண்மையை நன்கு வற்புறுத்தியிருக்கின்றன. ஒருவரின் உடல் விருத்திக்கு எவ்வாறு போஷாக்கு நிரம்பிய உணவு வகைகள் தேவைப்படுகின்றனவோ, அவ்வாறே ஒருவரின் உளம்—அறிவு விருத்திக்கு சிறந்த சமய—சன்மார்க்க நூல்கள் தேவைப்படுகின்றன. பழுதடைந்த உணவை உட்கொள்ளுவதால் ஒருவருடைய உடல்நலம் பாதிக்கப்படுகிறது. அவ்வாறே ஆபாசநூல்களால் ஒருவரின் ஆத்துமமும் பாழடைகிறது எனலாம்.

சுத்த காற்றைச் சுவாசிப்பது சுகத்துக்கு நல்லது என்பதை எல்லோரும் நன்கறிவர். அதுபோலவே நல்லநூல்களை வாசித்தல அறிவு விருத்திக்கு உகந்ததாயிருக்கின்றதன்றோ! நூல்கள் பலவகைப்பட்டனவாயிருக்கின்றன. அவற்றை வாசிப்பவர்களும் பல வயதைச் சேர்ந்தவர்களாயிருக்கின்றனர். மாணவர்கள்—மாணவிகள் பொதுவாக வாசிக்கும் நூல்கள் ஒரு வகையானவை. வாலிபர்களும், யுவதிகளும் வாசிக்கும் நூல்கள் வேறு ஒரு வகையின. வளர்ந்தவர்களும் இல்லறத்தவர்களும் வாசித்துப் பயனடையக் கூடிய நூல்கள் இன்னொரு வகைத்தன.

எனவே, ஒவ்வொரு நிலையினரும் அவர்கள் வாசிக்கத்தகுந்த நூல்கள் எவை என்று நன்குணர்ந்தபின்பே — அவற்றைத் தெரிந்தெடுத்த பின்பே அவற்றை வாசிக்க வேண்டும். இத்துறையில் பெற்றோரும், ஆசிரியர்களும் தங்கள் போதனையாலும் சாதனையாலும் சிறுவர் சிறுமியர்களுக்குச் சிறந்த வழிகாட்டல் செய்ய வேண்டும். அவர்கள் வாசிக்கும் நூல்கள் கலையவையா? அவர்கள் வாசிக்கத் தகுந்த நூல்கள் எவை? என்பன போன்ற புத்திமதிகளைச் சிறுவர்களுக்கும், சிறுமியர்களுக்கும், பெற்றோரும் ஆசிரியரும் கொடுக்கவேண்டும்.

வாலிபர்களுக்கும், யுவதிகளுக்கும் அறநெறி வழிகாட்டுனர்கள், சமயக்குரவர்கள், போதகர்கள் போன்றோர் அவர்கள் எத்தகைய நூல்களை வாசித்தல் நன்மைபயக்கும் என்று எடுத்து விளக்க வேண்டியகடமை பூண்டவர்களாயிருக்கின்றனர்,

எவ்வாறு ஒருநல்ல புத்தகம் ஒருநல்ல தோழனைப்போல் இருக்கிறதோ அவ்வாறே ஒரு தீயபுத்தகமும் ஒரு கெட்ட தோழனைப்போல இருக்கிறது. ''நல்லாரைக் காண்பதுவும் நன்றே'' ''என்பதைப் போலத் ''தீயாரைக் காண்பதுவும் தீதே'' என்ற உண்மையானது நூல்களைப் பொறுத்தமட்டிலும் உண்மையாகவே இருக்கின்றது.

மோக பாவத்தைப் போல் தீயவாசினையும் மிகக்கொடிய கேட்டை விளைவிக்கின்றது. பரிசுத்த ஆவியின் கோயிலான

(தொடர்ச்சி 5.ம் பக்கம்)

> சமூகத்தொடர்புக் கருவிகள் விளைக்கும் தீமைகளைக் கண்டுபிடித்து அவற்றைக் கண்டிப்பதைத் தவிர, திருச்சபைக்கு அவற்றோடு வேறு எந்தத் தொடர்பும் கிடையாது எனப் பல குருக்களும் கிறிஸ்தவர்களும் எண்ணி இருந்தனர் இன்றுவரை. ஆனால், இப்போ ......
>
> — மறைத்திரு எட்ப்ன்ட் பெக்கர்.

## இந்திய கத்தோலிக்க மாகாண சங்கம்

இலங்கையில் சென்ற வருடம் நடந்தேறிய மாகாண சங்கம் போலவே அகில இந்திய கத்தோலிக்க மாகாணசங்கம் இம்மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகி இருக்கிறது. மைசூர் பிரதேச தலைநகராகிய பங்களூரிலேயே இச்சங்கம் நடக்கிது. இச் சங்கத்துக்கு வேண்டிய ஆன்ம ஆயத்தம் உட்பட மறு ஆயத்தங்கள் சென்ற பலமாதங்களாக நடைபெற்றுவந்தன. சகலரையும் உஜார் நிலையில் இருக்கப்பண்ணும் நோககத்துடன் அகில இந்தியதேசிய ஆயர்மார் செய்யப்படும் வேலைகளை விளக்குகையில் ''தற்போது இந்தியாவில் கத்தோலிக்கவேதம் முன்னேறிவரும் நிலைமையைக் கண்டு வாளாவிராது, அதி முன்னேற்றத்துக்குள்ள தடைகளைநீக்க முறைகளை ஆராயவேண்டும்'' என அறைகூவியிருககின்றனர். இந்திய அரசாங்கமும் மறு சமுகத்தினரும் இக்கத்தோலிக்கமாகாண சங்கத்தில் பெரும் கரிசனை காட்டிவருகின்றனர்.

## தாயின் மடியில்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

அடிக்கடி அவளின் உதவியை நாடுவோம். வாடாத மலர் மாலையாகிய ஜெபமாலையைத் தினமும் ஓதிவருவோம். அவளின் பக்திமுயற்சிகளில் பங்கெடுத்துக்கொள்வோம். சிறப்பாக அவளின் முன்மாதிரிகையைப் பின்பற்றுவோம். அவள் காட்டிய விசுவாசம், பொறுமை வேதனையில் அமைதி, தாழ்ச்சி, இரக்கம், கருணை, பிறர்அன்பு என்பவற்றை அனுசரிப்போம். தேவ அன்னை எம் வாழ்வில் என்ன இடம் பெறுகிறாள் என்பதை அவளுக்கென அர்ப்பணிக்கப்பட்டஇம்மாதத்தில் சற்றுத் தியானிப்போம்.

அவளின் தெய்வீகத் தாய்மையைப் போற்றுவோம். இணையில்லா இதயதூய்மையை ஏத்துவோம், ஒப்பற்ற பரிந்துபேசும் வாய்மையை வாழ்த்துவோம். அவளின் அன்பைத் தேடி, உதவியை நாடுவோம. அரசியாக அவளைப் போற்றுவது மட்டுமல்ல, அவள் ஓர் அன்னை என்பதை உணர்ந்து அவளை அண்டிப் போவோம், அப்போது எம் துன்பங்கள் பரிதிமுன் பனிபோல் மறைந்துவிடும். துன்பம் துன்பமாகவே தோன்றாது. தாயின் மடியில் தலை வைத்திருந்தால் ...... துயரம் தெரிவதில்லை என்னும் உண்மையை விளங்கிக்கொள்வோம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ வைகாசி மீ 17ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. ("கத்தோலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org